SAPTHAGIRI (TAMIL)
ILLUSTRATED MONTHLY
Volume:1, Issue: 12, Pages:56
July -2022, Price Rs.5/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஜூலை 2022, விலை ரூ.5/-



திருமலையப்ப ஸ்வாமி
ஆனிவர ஆஸ்தானம்
17-07-2022



ஆந்திர மாநிலம் வேங்கடபாளையம் அருகில் தி.தி.தே. நிர்மாணித்த ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயத்திற்கு ஜீன் 05 முதல் 09 ஆம் தேதி வரை மஹா சம்ப்ரோக்ஷணம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சாரதா பீடாதிபதி ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸ்வருபானந்தேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் உத்திராதிகாரி ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸ்வாத்மானந்தேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் மேதகு ஆந்திர மாநில ஆளுநர் பிஷ்வ பூஷன் ஹரிசந்தன் அவர்கள், இந்து சமய அறநிலையத்துறைய அமைச்சர் திரு. கோ.சத்திய நாராயணா அவர்கள், தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத் தலைவர் திரு.ஒய். வி. சுப்பாரெட்டி அவர்கள் பங்கு கொண்டனர்















*தஸ்மாந்நார்ஹா வயம் ஹந்தும்*
*த$_4$ார்தராஷ்ட்ராந் ஸ்வப$_3$ாந்த$_4$வாந் |*
*ஸ்வஜநம் ஹி கத$_2$ம் ஹத்வா*
*ஸுகி$_2$ந: ஸ்யாம மாத$_4$வ ||*

**ஆகவே, மாதவா! நம் உறவினர்களான திருதராஷ்டிர குமாரர்களைக் கொல்வதற்கு நாம் தக்கவரல்லர். நாம் அவர்களைக் கொல்வது சரியன்று. ஏனெனில், நம் குடும்பத்தினரைக் கொன்று, நாம் எப்படி சுகமுள்ளவர்களாக இருப்போம்?**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1-37*

*நமோ நாராயணாயேதம்*
*க்ருஷ்ணத்வைபாயநாத்மகே |*
*யதாமுஷ்யாயணா*
*வேதா மஹாபாரதபஞ்சமா: ||*

**ஸ்ரீமஹாபாரதத்தை ஐந்தாவதாகவுடைய நான்கு வேதங்களும் எவர் மூலமாக வெளியிடப்பட்டனவோ, அந்த க்ருஷ்ணத்வைபாயனராக (வேதவ்யாஸராக) அவதரித்த நாராயணனை வணங்குகிறேன்.**

*– ஸ்ரீ பராசரபட்டர்*






திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# "நமாமி கோவிந்தா"

## பஞ்சகவ்ய பொருட்கள் விற்பனை மையத்தின் விலைப்பட்டியல்

| எண் | பொருட்களின் பெயர் | எடை/ கொள்ளளவு | விலை (ரூ.) |
|---|---|---|---|
| 01. | அவனி – தூப் சூர்ணம் | 50 கி | 70.00 |
| | | 100 கி | 115.00 |
| 02. | தரணி–தூப் அகர்பத்தி | 12குச்சிகள் | 60.00 |
| | | 24 குச்சிகள் | 110.00 |
| 03. | தாத்ரி–தூபம் கப்ஸ் | 6 கப்ஸ் | 70.00 |
| | | 12 கப்ஸ் | 110.00 |
| 04. | வைஷ்ணவி – தூபம் | 20 குச்சிகள் | 30.00 |
| 05. | வராஹி–தூபம் கோன்ஸ் | 12 கோன்ஸ் | 30.00 |
| | | 24 கோன்ஸ் | 50.00 |
| 06. | ப்ருத்வி – விபூதி | 10 கிராம் | 30.00 |
| | | 30 கிராம் | 40.00 |
| | | 50 கிராம் | 60.00 |
| | | 100 கிராம் | 100.00 |
| 07. | தன்ஷிக–பற்பொடி | 50 கிராம் | 40.00 |
| | | 100 கிராம் | 60.00 |
| 08. | ஹிரண்மை – ஃபேஸ் பேக் | 50 கிராம் | 110.00 |
| | | 100 கிராம் | 200.00 |
| 09. | மஹி – சோப்பு | 25 கிராம் | 40.00 |
| | | 75 கிராம் | 80.00 |
| | | 100 கிராம் | 110.00 |
| 10. | கஸ்யபி – ஷாம்பு | 5 மி.லி. | 10.00 |
| | | 100 மி.லி. | 210.00 |
| 11. | ஊர்வி – நாசல் ட்ராப்ஸ் | 10 மி.லி. | 100.00 |
| 12. | நந்தினி – கோ ஆர்க் | 200 மி.லி. | 50.00 |
| | | 500 மி.லி. | 110.00 |
| | | 1 லிட்டர் | 200.00 |
| 13. | பூமி – ப்ளோர் கிளீனர் | 1 லிட்டர் | 250.00 |
| | | 5 லிட்டர் | 1050.00 |
| 14. | க்ஷம – பசுமாட்டு சாண வறட்டி | 10 | 140.00 |
| | | 12 | 170.00 |
| 15. | பூவட்டி – பசுமாட்டு சாணக்கட்டை | 06 | 90.00 |
| | | 12 | 180.00 |

மேலும் விவரங்களுக்கு தொலைபேசி எண்கள் : 0877-2277777, 2233333




வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

மலர் 01 | இதழ் 12

## ஜுலை 2022


உள்ளுறை — பக்கம்


திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம் :
திருமலை நிற்கும் தேவே! சகல உறவும் நீயே! 7
- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.

திருவேங்கடவனின் திருலீலைகள் 11
- ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை.

ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள் : ஜிதக்ரோதன் 12
- ஸ்ரீ உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி, சென்னை.

நம்மாழ்வாரின் திருவாய்மொழிச் சிறப்பு 14
- ஸ்ரீ உ.வே. முனைவர் கோ.க.அ.ரங்கராஜன் ஸ்வாமி, திருப்பதி.

பெரியாழ்வாரின் "வாத்சல்ய"பக்தி 17
- திருமதி டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி, திருப்பதி.

ஜோதிட சாஸ்திரம்: நவக்கிரகங்கள்–குரு 22
- முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி, திருவல்லிக்கேணி.

திருப்புகழ் போற்றும் தணிகைவேலன் 24
- முனைவர் ஆ. செந்திலாண்டவன், சென்னை.

வேதவியாசர் - திரு. ஆர். நமச்சிவாயன், சென்னை. 31

சிறு மா மனிசர் - திரு.எஸ். சுதர்சனம், நங்கைநல்லூர். 33

நீதிக்கதைகள் : திருடன் சாதுவானான் 37
- திரு. ஜெ.சுவாமிநாதன், சென்னை.

ஆடித்தபசு - புலவர் க. சுகுமாரன், மன்னார்குடி. 38

108 திவ்யதேச வைபவம் – திருவல்லவாழ் (திருவல்லா) 40
- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்
- ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. 43

ஸ்ரீமத் பகவத்கீதை - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். 45

அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை : பரதாழ்வான் 47
- திரு. எஸ்.ஸ்ரீதுரை, சென்னை.

ராசிப்பலன்கள் : ஜுலை 2022 -
முராரி. எம்.வி. நரநாராயணன், சேலம். 50

சித்திரக்கதை : உண்மையே பேசு 52



சிறப்பு ஆசிரியர் :
திரு. A.V. தர்மா ரெட்டி, ஐ.டி.இ.எஸ்.,
செயலாட்சித் தலைவர் (F.A.C), தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. பி.ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360


நீங்கள் ஸப்தகிரி இதழை **www.tirumala.org**யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு **sapthagiri.helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


**அட்டைப்பட விளக்கம்**

முன்னட்டை : ஸ்ரீதேவி , பூதேவி சமேத திருமலையப்ப ஸ்வாமி , திருமலை.

பின்னட்டை : உபய நாச்சிமார்களுடன் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி, ஸ்ரீநிவாசமங்காபுரம்.

உங்களுடன்...

# திருமலையின் புனிதத்தை காத்திடுவோம்!

திருமாமகள் கேள்வன் திருவைகுந்தத்தை விடுத்து திருமகளைத் தேடி முதலில் தன் திருவடிகளை வைத்த அடர்ந்த வனப்பகுதியே சேஷாத்ரி மலை ஆகும். இந்த சேஷாசலம் பசுமை நிறைந்த அபூர்வமான தாவரங்களும், அரிதான விலங்குகளும் வாழும் இயற்கை வளம் மிக்க பழம் பெரும் மலைத் தொடராகும். இந்த அடர்ந்த வனப்பகுதியில் பல புண்ணிய நீர்வீழ்ச்சிகளும், சிற்றோடைகளும், எண்ணற்ற உயிரினங்களும் உள்ளன.

இது குறித்தே திருமங்கை ஆழ்வார், ***''வேயேய் பூம்பொழில் சூழ் விரையார் திருவேங்கடம்''*** என்றும், குலசேகர ஆழ்வார் ***''பொன்மலையில் ஏதேனுமாவேனே''*** என்று இப்புனிதமான மலையில் ஏதாவது ஒரு பொருளாக இருக்க வேணும் என்றும் பாசுரமிடுகின்றனர். திருமழிசையாழ்வாரோ ***''சென்று வணங்குமினோ சேணுயர் வேங்கடத்தை''*** என்று இம்மலையே எம்பெருமானின் திருவடிவாகக் குறிப்பிடுகிறார். வேங்கட மலையை எம்பெருமானாகக் கருதி ஆழ்வார்கள் தங்கள் திருவடிகளை வைக்காத காரணத்தினால் இராமானுஜரும் தம் திருப்பாதங்களால் இம்மலையை மிதிக்கலாகாது என்று எண்ணி தன் முழங்கால்களினால் திருமலையை ஏறிச் சென்றார்.

இவ்வாறாக ஆழ்வார்களாலும், ஆசார்யபுருஷர்களாலும் புனிதமாகக் கருதப்பட்ட இப்புனித திருமலையானது நவீனமயமான இக்காலத்தில் மானிடர்களால் மாசுபடுத்தப்பட்டு வருகின்றது. இம்மாசானது இன்று உலகையே அச்சுறுத்தியும் வருகின்றது. இது தட்பவெட்ப நிலையை மாற்றி, இயற்கை பேரிடர்களை உண்டாக்கி வருகின்றது. அதிலும் அகற்ற முடியாத அளவிற்கு பூமியை மாசுபடுத்தி வருவது பிளாஷ்டிக் பொருட்களாகும். குறிப்பாக, இப்பிளாஷ்டிக் பொருட்கள் மண் வளத்தையும், நீர் வளத்தையும் மாசுபடுத்தி விடுகின்றது.

திருமலைக்கு வரும் பக்தர்களும் பிளாஷ்டிக் பொருட்களை நடைபாதை, மலைவழிச் சாலை மற்றும் திருமலையில் ஆங்காங்கே வீசி எறிகின்றனர். இதனால் இம்மலையையே வாழ்விடமாகக் கொண்டு இருக்கும் அரிய வனவிலங்குகள் இப்பிளாஷ்டிக் பொருட்களை உண்பதால் அவை அழிய வழிவகுக்கின்றது. திருமலையில் உள்ள நீரோடைகளிலும் இப்பிளாஷ்டிக் பொருட்கள் கலந்து விடுவதால் நீரும் மாசடைந்து, எழில் மிகு இயற்கை வளமும் அழியக் காரணமாக அமைகின்றது.

எனவே, இதனைக் கருத்தில் கொண்டே திருமலை திருப்பதி தேவஸ்தானம் திருமலையில் பிளாஷ்டிக் பொருட்களுக்கு "முழுத்தடை" விதித்து உள்ளது. திருமலையில் இயற்கையோடு ஒன்றக் கூடிய சணல், துணிப் பைகளை தயாரித்து பக்தர்களுக்கு வழங்கியும் வருகின்றது. பிளாஷ்டிக் குடிநீர் பாட்டில்களை தடுக்கும் வகையில் திருமலையில் ஜலப்பிரசாதம் என்ற பெயரில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை இலவசமாக வழங்கும் கருவிகளும் ஆங்காங்கே பொறுத்தப்பட்டுள்ளன.

திருமலையின் தூய்மையையும் பசுமையையும் பராமரிக்க தேவஸ்தானத்தாரின் இந்நற்பணி செம்மனே தொடர பக்தர்களான நாமும் உதவுவோம். பிளாஷ்டிக் பொருட்களை திருமலைக்கு கொண்டு வருவதை தவிர்த்து கண்ணாடி, எவர்சில்வர் போன்றவற்றால் தயாரிக்கப்பட்ட குடிநீர் பாட்டில்களை பயன்படுத்துவோம். இயற்கை வளத்தை காக்கும் பொறுப்பு நம் அனைவருக்கும் உண்டு என்பதை கருத்தில் கொள்வோம்.

**திருமலையில் பிளாஷ்டிக் பொருட்களைத் தவிர்ப்போம்.**
**திருமலையின் இயற்கை எழிலைக் காப்போம்.**

# திருமலை நிற்கும் தேவே!
# சகல உறவும் நீயே!

நம் ஒவ்வொருவருக்கும் இரண்டு வகையான உறவுகள் உண்டு. ஒன்று ரத்த சம்பந்த உறவுகள். தாய், தந்தை, மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள் போன்ற உறவுகள்.இந்த உறவுகள் அந்தந்த பிறவிக்கானது. ஒரு குடம் நீரோடு உறவும் போகும்.

எல்லாப் பிறவிக்கும் இதே உறவுகள் தொடர்ந்து வருவதில்லை. வினைகளுக்கு ஏற்ப வெவ்வேறு விதமான முறையில் ஜீவன்கள் பிறக்கின்றன என்று கருட புராணம் போன்ற நூல்கள் சொல்லுகின்றன.

இந்த உறவுகளை உத்பாதிக உறவுகள் என்று சொல்லுவோம். இவர்கள் தற்காலிகமான உறவுகள்.

அப்படியானால் நிரந்தர உறவு ஒன்று இருக்க வேண்டும் அல்லவா.

அந்த நிரந்தர உறவு யார்? நிரந்தரமான தாய்–தந்தை மனைவி மக்கள் குழந்தை உற்றம் சுற்றம் யார்?

*''சேலேய்கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும்,*
*மேலாத்தாய் தந்தையுமவரே யினியாவாரே''*

என்றும்

*''தாயாய்த்தந்தையாய் மக்களாய் மற்றுமாய்*
*முற்றுமாய், நீயாய் நீ நின்றவாறு''*

என்றும் இந்தக் கேள்விக்கு ஆழ்வார்கள் விடை சொல்கிறார்கள். அவனே தாய். அவனே தந்தை. அவனே நட்பு. அவனே சுற்றம், அவனே செல்வம். அவனே எல்லாம்.

*த்வமேவ மாதா ஸ பிதா த்வமேவ*
*த்வமேவ பந்துச்ச சகா த்வமேவ*
*த்வமேவ வித்யா த்ரவிணம் த்வமேவ*
*த்வமேவ சர்வம் மம தேவ தேவ!*

என்றபடி எல்லா உறவுகளும் அவன் என்று உணர்வதே ஆன்மீகப் புரிதலின் அடையாளம். ஆழ்வார்கள் உணர்ந்ததால் தான் *''ஊரிலேன் காணியில்லை; உறவு மற்றொருவர் இல்லை''* என்று பாடினார்கள்.

உத்பாதிக உறவு போகும். நிருபாதிக உறவு போகாது. அவனே நினைத்தாலும் போகாது. *''உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது''* என்று ஆண்டாள் நாச்சியார் அவனுக்கும் நமக்குமான உறவு அவனாலும் போகாது; நம்மாலும் போகாது என்று ஆணித்தரமாகச் சொல்கிறார்.

இதைத்தான் ஒரு திருவேங்கடப் பாசுரத்தில் திருமங்கை ஆழ்வார் உருக்கமாகப் பாடுகிறார்.

இந்தப் பாசுரத்தை படித்தாலே நமக்கு உள்ளம் சிலிர்க்கும். அந்தப் பாசுரம் இது.



–பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963.

*தாயேதந்தையென்றும் தாரமேகிளைமக்க
ளென்றும்
நோயேபட்டொழிந்தேன் உன்னைக் காண்ப
தோராசையினால்
வேயேய்பூம்பொழில்சூழ் விரையார்
திருவேங்கடவா
நாயேன்வந்தடைந்தேன் நல்கியாளென்னைக்
கொண்டருளே*

முதலில் இதன் பொருளைப் பார்த்து விடுவோம்.

திருமலையின் அருமையான இயற்கை அமைப்பை வர்ணிக்கிறார் ஆழ்வார். எங்கு பார்த்தாலும் மூங்கில்கள் நெருங்கியிருக்கப் பெற்ற காடுகள்.

அதே நேரம் கண்ணுக்கு இனிமையான வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் பூஞ்சோலைகள். அதன் பரிமளம்... அடடா... இந்தத் திருமலையில் எழுந்தருளியுள்ள பெருமாளிடம் தான் ஆழ்வார் கேட்கிறார்.

"இதோ பார்... தாயே என்றும், தாரம் என்றும், மக்கள் என்றும், சரீர ஸம்பந்திகளையே எப்போதும் வாய்வெருவிக்கொண்டு நோய்பட்டு ஒழிந்தேன். இப்போது மீண்டேன். " மெய்ப்பொருள் ஒன்று இருப்பதை தெரிந்து கொண்டேன்.

உன்னைக் காணும் ஆசை தலை எடுத்தது, அந்த ஆசையினால் உன்னிடம் வந்து சரணம் புகுந்தேன். சரணாகதனான என்னைக் கைவிடாது கிருபை செய்து, அடிமை கொண்டருள வேணும்.

எதை விட வேண்டுமோ, அதை விட்டு, எதைப் பற்ற வேண்டுமோ அதைப் பற்றினேன் என்கிறார். சரி, தாய் தந்தையர்களை "நோய்" என்று சொல்லலாமா? அப்படி மரபு உண்டா? தமிழ் மூதாட்டியின் பாடல் இது,

*உடன் பிறந்தார் சுற்றத்தார் என்று இருக்க
வேண்டா
உடன் பிறந்தே கொல்லும் வியாதி - உடன்
பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும்
அம்மருந்து போல் வாரும் உண்டு.*

சரி, நோய் என்ற சொல்லுக்குப் பொருள் என்ன? நோய் என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உண்டு. பிணி என்ற பொருள் உண்டு. பிணியென்றால்

# திருமலையப்பனுக்கு ஆனிவர ஆஸ்தானம்

**திருவேங்கடமுடையானின் வருடாந்திர கணக்குகள் ஆடி மாதத்தின் முதல் நாளில் ஆரம்பமாகின்றன. இந்த முதல் நாளில் நடத்தப்படும் உத்ஸவத்தை தெலுங்கில் ஆனிவர ஆஸ்தானம் என்றும், தமிழில் ஆடிப் பூஜை என்றும் அழைக்கப்படுகிறது. "திரு ஆண்டு எழுத்து இடும் போது" (அதாவது வருட ஆரம்பம்) எனும் சொல் கல்வெட்டுகளிலும் காணப்படுகிறது. திருவேங்கடமுடையானுக்கு வருடம் முழுவதும் கிடைக்கின்ற வருமான கணக்குகளை ஒப்படைத்து, மீண்டும் புதிய கணக்குகளை இந்நாள் முதல் துவங்குவர்.**

**16-07-1843-ல் ஆலய நிர்வாகம் ஆங்கிலேயர்களிடமிருந்து மகந்துக்களிடம் ஒப்படைக்கப்பட்ட நாளே இந்நாளாகும். அதன் அடையாளமாகவே இந்த ஆஸ்தானம் அன்று முதல் இன்று வரை தங்கு தடையின்றி நடத்தப்பட்டு வருகின்றது. மஹந்துக்களின் 90 வருட நிர்வாகத்திற்குப் பின்னர் பொறுப்பாண்மைக் குழுவிடம் நிர்வாகம் வந்த பிறகு பட்ஜெட் ஏப்ரல்-மார்ச் என்று மாற்றப்பட்ட பின்னரும் ஆடி முதல் நாள் இந்த ஆஸ்தானம் நடத்தப்பட்டு வருகின்றது.**



பிணித்தல், கட்டுதல். ஒன்றிணைத்தலுக்கு பிணித்தல் என்று பெயர். சம்பந்தம் என்று பெயர்.

தாய் தந்தை தாரம் என்பதெல்லாம் உறவுகள் (சம்பந்தங்கள்) தானே. பல பெயர்களோடு சொல்லப் படும் உறவுகளோடு கட்டியவைதானே. இந்த கட்டிய கட்டைத்தான் முதல் வரியில் நோய் என்று சொல்லு கின்றார். நோய் என்பது இந்த இடத்தில் தவறான சொற்பிரயோகம் அல்ல. இது இந்த உலகில், உடல் தொடர்பால் வந்தப் பிணைப்பு என்பதைத்தான் “நோய்பட்டு ஒழிந்தேன்” என்கின்றார்.

ஒழிந்தேன் என்கிற சொற்பிரயோகமும் அபார மான அர்த்தத்தைத் தரும். ஒழிதல் என்றால் முடிந்து விடுதல், அற்றுத் தீர்த்தல், கெட்டு விடுதல் என்று பல பொருள்களில் வரும். ஒழிந்து விட்டேன் என்று சொன்னால் முடிந்து விட்டேன் என்று அர்த்தம். யாரிடத்தில் ஒழிந்தேன் என்பதுதான் முக்கியம்.

குலசேகராழ்வார், *‘‘பேயனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே’’* என்று என் பிரானுக்கே ஒழிந்ததைச் சொல்லுகின்றார். திருமங்கையாழ்வார், உறவு என்னும் நோயே பட்டு ஒழிந்தேன் என்று தன்னுடைய கேட்டினைச் சொல்லுகின்றார்.

சரி, நோய் என்று இருந்தால், அதற்கு மருந்து என்று ஒன்று இருக்க வேண்டும் அல்லவா. பசி என்பது ஒரு பிணி, அதற்கு மருந்து உணவு. அதைப் போல பல்வேறு நோய்களுக்கும் மருந்துகள் உண்டு. ஆனால், திரும்பத்திரும்ப, “ஜனனம் மரணம்” என்கின்ற பிறவி நோய்க்கு, என்ன மருந்து?

தாய், தந்தை உற்றம் சுற்றம் மனைவி மக்கள் போன்றவை என்ன செய்யும்? மறுபடியும் வினை களைச் செய்ய வைத்து, பாப புண்ணியங்களைச் சம்பாதித்துக் கொடுத்து, அதன் அடிப்படையிலே மற்றொரு பிறவியில் கட்டிப் போடும் இந்த நோய்க்கு மருந்து யார்?”

பெரியாழ்வார் மருந்து சொல்கிறார்.

*“எருத்துக் கொடியுடை யானும் பிரமனும்*
*இந்திரனும் மற்றும்*
*ஒருத்தரும் இப்பிற வியென்னும் நோய்க்கு*
*மருந்தறி வாருமில்லை*
*மருத்துவ னாய் நின்ற மாமணி வண்ணா*
*மறுபிற விதவிரத்*
*திருத்திஉங் கோயிற் கடைப்புகப் பெய்திரு*
*மாலிருஞ்சோலையெந்தாய்.”*


இந்த இடத்தில் பிறவி என்பதை நோய் என்று காட்டுகிறார் பெரியாழ்வார். அந்த நோயைத் தீர்ப்பவன் மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணன். பெரியாழ்வார் கூற்றைத்தான், வேறு மொழியில்



## வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்

*ததஸ்ய சிஷ்யாவ்ருதயாத$_3$வம் தம் ராமாநுஜம் மத்$_4$யக$_3$தம்*
*சப$_4$ாந்தம் ।*
*ஸமீக்ஷ்ய ராமாநுஜசிஷ்ய ஏஷ சேத்$_3$யாத$_3$வோ யுக்தமிதீவ*
*த$_3$த்$_4$யௌ ॥*
(14)

**அதன் பிறகு, சிஷ்யர்களால் சூழப்பெற்ற யாதவரையும் அவர்களிடையே ஒளி வீசும் இராமாநுஜரையும் கண்டு “இந்த யாதவர் இராமாநுஜருக்கு சிஷ்யராயிருக்கவே தக்கவர்” என்று திருவுள்ளம் பற்றினார் ஆளவந்தார்.**



**– “ஸுதர்சனம்” ஆசிரியர் இயற்றியது**

**தடை விதிக்கப்பட்ட பொருட்கள்**

**திருமலை ஆலயத்திற்குள் தேங்காய், செல்போன், டிஜிட்டல் கைகடிகாரங்கள் போன்ற மின்னணு பொருட்கள், காலணிகள், வெடிப்பொருட்கள், பிளாஷ்டிக் பொருட்கள் எடுத்து செல்லுதல் கூடாது**

திருமங்கையாழ்வார், “தாயே தந்தை என்றும் தாரமே கிளை மக்கள் என்றும் நோய் ஏற்பட்டு உள்ளது. அந்த நோய்க்கு மருந்து திருவேங்கடத்தில் நிற்கும் நீயே என்பதைத் தெரிந்து கொண்டேன்” என்று இந்தப் பாசுரத்தில் காட்டுகின்றார்.

*“மருந்தும் பொருளும் அமுதமுந்தானே,*
*அறிந்தனர் நோய்களறுக்கும் மருந்தே”*

*“மருந்தே நங்கள் போகமகிழ்ச்சிக்*
*கென்று*
*பெருந்தேவர் குழாங்கள் பிதற்றும்*
*பிரான்”*

*“அருமருந்தாவதறியாய்”*

என்று அருளிச் செயல்களிலும் இந்த மருந்து பற்றிய குறிப்புகள் உண்டு.

கீழ்த்திருமொழியில் பாசுரந்தோறும் “திருவேங்கடமடை நெஞ்சமே – திரு வேங்கடமடை நெஞ்சமே” என்று சொல்லித் திருமலைக்குப் போய் திருமலையப்பனை தரிசிக்க வேண்டும் என்கின்ற பேராவலை தம்முடைய நெஞ்சுக்குத் தூண்டிவிட்டார்.

நெஞ்சும் ஆழ்வாரின் வேண்டு கோளுக்கு இசைந்தது, இசையாத நெஞ்சை வைத்துக் கொண்டு எதைச் செய் தாலும் பலன் இல்லையே? திருமலையில் எல்லாவித உறவாகவும் திருமலையப்பன் நின்றிருக்கிறான். “நம்முடைய ஆசைகளை இங்கே நிறைவேற்றிக் கொள்ளலாம்” என்று மிகுந்த எதிர்பார்ப்போடு வந்தார் ஆழ்வார்.

இப்படி வந்த ஆழ்வாரே, எதிர் கொண்டழைத்தல், அணைத்தல், வார்த்தை சொல்லுதல் கைங்கரியத்திலே ஏவுதல் என ஒன்றுஞ் செய்திலன் திருமலையப்பன். அதனால் ஆழ்வார் மிகவும் திருவுள்ளம் நொந்து போகின்றார்.

“ஸர்வஜ்ஞனாய் ஸர்வ சக்தனாய் நமக்கு வகுத்த நாதனாய் பிராட்டியை ஒரு நொடிப்பொழுதும் விட்டுப் பிரியாதானாயிருக்கும் இப்பெருமான் இப்போது நம்மை கண்டுகொள்ளாமல் இருப்பதற்குக் காரணம், நம்முடைய கனத்த பாவங்களேயாக வேணும்” என்று நிச்சயிக்கிறார். அப்பெருமான் திருவுள்ளத்திலே இரக்கம் பிறக்கும்படி பாசுரம் பேசுகிறார்.

“பெருமானே, உறவு அல்லாதவர்களை உறவாக நினைத்தும், இன்பம் இல்லாத விஷயங்களை இன்பமாகக் கொண்டும், பல உயிர்களைக் கொன்றும், காலம் கழித்தவன், ஆயினும் உன்னை விட்டுத் தரிக்கமாட்டாத அன்பு பிறந்ததனால் இவ்விடம் வந்து சேர்ந்தேன்”.

என்னுடைய முன்னைத் தீவினைகளைப் பார்த்துக் கைவிடலாகாது; நீயோ ஸர்வரக்ஷகன், நானோ உன்னை விட்டால் வேறு கதி அற்றவன். என் குற்றங்களைப் பொறுப் பிக்கைக்குப் பிராட்டியும் – உன் திருமார்பிலே நித்திய வாசம் செய்கின்றாள்; பிறகு என்ன?

என் குற்றங்களைப் பொறுத்தருளி அடியேனைக் கைக் கொண்டருள வேணுமென்று சரணம் புகுகிறார். இந்தப் பதிகத்தின் ஒன்பதாம் பாட்டிலே “மாயனே எங்கள் மாதவனே” என்று பிராட்டி ஸம்பந்தம் வெளிப்படுகிறது. அதனால் புருஷகாரம் முன்னாகச் சரணம் புகுகிறார்.

இந்தப் பாசுரத்தில் “நாயேன்” என்றொரு சொல். நாயேன்– நாய் போலே, நீசன் என்று நைச்யாநுஸந்தாநம் பண்ணுகிறார். இவ்விடத்தில் பெரியவாச்சான்பிள்ளை ஒரு புதுக்கோணம் காட்டுகிறார்.

நாயேன், நான் செய்து கொண்டபடியைப் பார்த்தால் பிறர்க்குமாகேன் தேவரீர்க்குமாகேன் புறம் போக்கில் கல்லை இட்டெறிவர்கள், உள்ளே புதரில் தொட்டனவும் தீண்டினவும் பொகட வேண்டி வரும்.

ராஜபுத்ரர்கள் நாய்களையே மேல்விழுந்து விரும்புமா போலே ராஜாதி ராஜனான நீயும் என்னை மேல் விழுந்து விரும்பவேணுமென்பது உள்ளுறை.

பாசுரம் படிப்போம்...

திருவேங்கடவனின்
திருலீலைகள்



# ஏழுமலையானின் அற்புதங்கள்

ஸ்ரீநிவாசனின் அற்புத நிகழ்வுகளில் ஒன்றை குறிப்பிடுகிறேன். பல வருடங்களுக்கு முன்பு நடந்தது. என் அண்ணனின் திருமணத்திற்கு, என் தங்கை குடும்பத்தினர் அனைவரும் என் தாய் வீட்டிற்கு வந்திருந்தார்கள். திருமணம் வெளியூரில், மாப்பிள்ளையுடன் அனைவரும் மறுநாள் செல்ல ஏற்பாடு நடந்து கொண்டிருந்தது.

என் தங்கையின் ஒரே மகன் (இரண்டரை வருடம்) குமரன். ஆரத்தி கரைப்பதற்கு வைத்திருந்த சுண்ணாம்பு பொட்டலத்தை (சிறிய பாக்கெட்) அழுத்தி, அழுத்தி விளையாடி கொண்டிருந்தான். அழுத்தத்தினால் பாக்கெட் வெடித்து கண்ணில் அப்படியே அப்பிக் கொண்டது. எரிச்சல் தாளாமல் குழந்தை கதறியது.

என் தங்கையின் கணவர் ஏழுமலையானை குறைத்து பேசுவதுண்டு. திருநாமத்துடன் கூடிய கமலக்கண்ணனான அவர், கண்ணுத் தெரியாத சாமி என்பார்.

நாங்களும் உடனே மருத்துவமனைக்குச் செல்லாமல், மறுநாள் சென்று கண் மருத்துவரிடம் காட்ட அவரும் பரிசோதித்து விட்டு “கண் தெரிவது கடவுள் செயல்” என்று சொல்லி விட்டார். அழுது புலம்பிய அவர், ஸ்ரீமந்நாராயணனை நினைத்து கதறி கண்ணீர் மல்க வேண்டிக் கொண்டார்.

திருவேங்கடவனின் மகிமையால் குழந்தைக்கு மீண்டும் கண் பார்வை கிடைத்தது.

அன்றிலிருந்து அவர் திருமலைக்கு தொடர்ந்து செல்கிறார். திருமண் இட்டு கொள்கிறார். ஏழுமலையானை துதித்து பேசுகிறார். எல்லாம் அவன் அற்புதங்களே!

**தொகுப்பு : ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை**
**9566982856**

12

# ஜிதக்ரோதன்

## ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள்

- ஸ்ரீ. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி,
சென்னை.

**கோபத்தை வென்றவன் - கோபத்தைத் தூண்டக் காரணம் இருக்கும்போதும் கோபம் அடையாதவன்**

**யாரிடம் கோபப் படலாம்?**

தந்தை சொல்காக்க வனம் வந்த இராமனைத் திரும்ப நாட்டிற்கு அழைத்துச் செல்லும் வேட்கையுடன் பரதன் இராமனைத் தேடி பெரும் சேனையோடு சித்ரகூடம் வருகிறான். தூரத்தில் அவனைக் கண்ட இலக்குவன், அவன் இராமனைக் கொல்லும் எண்ணத்தோடு வருகிறானோ என்று தவறாக ஐயப்பட்டு, அடங்காச்சினம் கொண்டான். நேரே பர்ணசாலைக்குள் புகுந்து அனைத்து ஆயுதங்களையும் ஏந்திக்கொண்டு பூமி அதிர பரதனோடு போர் புரியப் புறப்பட்டான். இதைக் கண்ட இராமன் "லக்ஷ்மணா! நீ வீணாக சந்தேகம் கொள்கிறாய். பரதன் என்னிடம் உள்ள அன்பால் அரசை சமர்ப்பிக்க வருகிறான் என்று நினைப்பதை விடுத்து ஏன் வீணே கோபம் கொள்கிறாய்? பரதன் மேல் நான் வைத்திருக்கும் அன்பும் மதிப்பும் எவ்வளவு ஆழமானது தெரியுமா?

ஒரு வேளை அவன் என்னை எதிர்த்து வந்தான் என்று வைத்துக் கொண்டாலும் கூட, அவனோடு சண்டையிடுவேன் என்றா நினைக்கிறாய்? அவன் என்னை எதிர்த்தான் என்ற நினைவே என்னைக் கொன்று விடுமே! புரிந்து கொள்; கோபத்தை விடு" என்றான்.

சிறந்த பண்பாளர்கள், அவர்கள் ஏதாவது தவறாகச் செய்வதாக நமக்குத் தோன்றினாலும், தீர விசாரிக்காமல் உணர்ச்சிவசப்பட்டு அவர்கள் மேல் சட்டென்று ஐயமோ கோபமோ கொள்வது அறிவுடையார்க்கு இழுக்கு.

**கோபம் நெருப்பாய் வெடித்தது; கருணையோ தண்ணீராய் அதனை அணைத்தது!**

சீதைக்கும் இராமனுக்கும் திருக்கல்யாணம் முடிந்து நாடு திரும்பும் வழியில் பரசுராமர் எதிர்த்தார். கோபத்தின் உருவான அவர் "ராமா! ஏற்கனவே உறுதியிழந்திருந்த சிவதனுசை முறித்தது



**கருத்து:**

**விறகு நெருப்பைத் தூண்டும்; தண்ணீரோ நெருப்பை அணைக்கும்; கோபம் மேன்மேலும் கோபத்தையே தூண்டும்; ஆனால், பொறுமையோ கோபத்தையே அணைத்து மனதினைக் குளிர்வித்து குணவானாக்கும்.**

# பயம்

தொகுப்பு :
திரு. வை. இராமமூர்த்தி,
தாம்பரம்.

“பயம்” எனும் ஒரு சொல்லே நம்மையும் அறியாமல் பயமுறுத்துகிறது. மனதில் ஒரு விதமான கவலையையும் பீதியையும் உண்டாக்குகிறது.


சாலையில் நடந்து போகும்போது ஏதாவது லாரியோ, பேருந்தோ அல்லது இதர வாகனங்களோ நம்மை இடித்துத் தள்ளி விடுமோ எனும் பயம் மேலோங்கி நிற்கிறது. மருத்துவரிடம் போவதற்கு முன்னரே இனமறியாத பயம் நம்மை தானாகவே ஆட்கொள்கிறது. ரத்தக்கொதிப்பு சில சமயத்தில் பயத்தாலேயே ஏற்படுகிறது. பயம் நம்மை படாதபாடு படுத்துகிறது. மாணவர்கட்கு பயம் தேர்வில் நன்கு தேற வேண்டுமே என்று, நேர்முகத்தேர்விற்குச் செல்லும் முன்னரே பயம் ஆட்கொள்கிறது. சொற்பொழிவு ஆற்றுவதற்கு முன்னரே பயம் ஆட்டிப் படைக்கிறது. வீட்டில் தனியாக இருந்தால் பயம், கூட்டத்திலும் சரி என்ன ஆகுமோ ஏதாவது கலவரம் ஏற்படுமோ எனும் பயம். ஆகமொத்தம் எங்கும் எப்போதும் பயம், பயம்... தவிர வயது முதிர்ந்தவருக்கு மரண பயம்.

*“மேன்மைப் படுவாய் மனமே! கேள் விண்ணின் இடிமுன் விழுந்தாலும்*
*பான்மை தவறி நடுங்காதே; பயத்தால் ஏதும் பயனில்லை*
*யான்முன் னுரைத்தேன் கோடிமுறை இன்னும் கோடி முறை சொல்வேன்*
*ஆன்மா வான கணபதியின் அருளுண்டு அச்சம் இல்லையே”*

என்று பாரதியார் கூறிய அருள்மொழியை ஈண்டு நினைவு கூறுவோம்.

பயத்தையும் நம்மை எல்லாம் துன்பக் கேணியில் வீழ்த்தும் கவலையையும் அறவே போக்க ஒரே ஒரு வழிதான். அந்த வழி யாதெனில் சதா இறைவனை நினைத்து தியானம் செய்வது தான். உள்ளக் கமலத்தை செம்மையுற வைத்துக்கொண்டு, பயத்தை வெல்வோம், பரமனை என்றும் நினைத்திடுவோம்” எனும் பொருள் பொறிக்கப் பெற்ற கேடயத்தை நாம் என்றும் கவசமாக வைத்துக் கொள்வோம்.

பயம் எனும் அபாயத்தைத் தவிர்க்க பரமனின் திருநாமமே ஒரு உபாயம் என்றால் மிகையாகாது. பயம் எனும் பேயை விரட்டுவோம்! தைரிய லட்சுமியை வரவேற்போமாக!




ஒரு பெருமையோ? வலிமை இருந்தால் என் கையில் இருக்கும் முறிக்க முடியாத இந்த விஷ்ணுவின் வில்லை ஏந்திக்காட்டு, பார்க்கலாம்” என்று கேட்டார். அப்படித் தூண்டப்பட்ட போதும் நிதானத்தை இழக்காத ஸ்ரீராமன் அவர் கையிலிருந்த வில்லை வாங்கி கம்பீரமாக அதனை ஏந்தி நின்று பரசுராமரை வெட்கப்பட வைத்தான். ரோஷராமரான பரசுராமரை காகுத்தனான தசரத ராமன், தன் கருணையாலேயே வென்றான்.

கோபத்தால் எதையும் சாதிக்க முடியாது. தனக்குப் பிடிக்காதவனுக்குத் துன்பம் விளை விப்பதாக எண்ணி அவன் மேல் காட்டப்படும் கோபம் இறுதியில் கோபித்தவனுக்கே பெரும் துன்பமாய் வந்து சேரும்.

**வளரும்...**

சென்ற இதழின் தொடர்ச்சி...

# நம்மாழ்வாரின் திருவாய்மொழிச் சிறப்பு

- ஸ்ரீ உ.வே.முனைவர் கோ.க.அ. ரங்கராஜன் ஸ்வாமி,
திருப்பதி, 99855 99669

**திருவாய்மொழியில் அகப்பொருள் விளக்கம் :**

பண்டைத் தமிழிலக்கியங்களின் தலையாய இருவகைப்பாடுகளாகிய அகமும் புறமும் (காதலும் வீரமும்) பக்தி இலக்கியக் காலத்தில் பக்தி வைராக்கியங்களாகச் (ஒருநிலைப்பாடு) சமயப் பாடல்களில் இடம் பெற்றன.

அகப்பொருள், காதல் துறைகள் பல மதுர பக்தித் துறைகளாக மருவி வந்தன. நம்மாழ்வார் பாசுரங்களில் சங்கத்தமிழ்க் காதல் துறைகள் நாயக–நாயிகா பாவத்தில் துறை பல கொண்டு பாசுரங்களாக அமைந்தன. ஆசாரிய இருதயம் என்னும் நூலை இயற்றிய அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் என்னும் ஆசாரியர், தலைமகள், தாய், தோழி என்னும் பாத்திரங்களில் பாசுரங்களாக ஆழ்வார் இருபத்தேழு அகப்பொருள் பதிகங்களை வகைப்படுத்தி ஆழ்வார் தம் திருவுள்ளக் கிடக்கையைத் தெரிவிக்கிறார். பராங்குச நாயகி இறைவனைக் காணாமல் வருத்தமுற்றுச் சில பறவைகளைத் தூது விடுகிறார். இவ்வாறு நான்கு பதிகங்கள் திருவாய்மொழியில் அமைந்துள்ளன.

1) அஞ்சிறை மடநாராய் (1.4.1) – வியூகம்
2) வைகல் பூங்கழிவாய் (6.1.0) – விபவம்
3) பொன்னுலகாளீரோ (6.8.0) – பரத்துவம், அந்தர்யாமித்துவம்
4. எங்கானகங்கழிவாய் (9.7.0) – அர்ச்சை

அவற்றில் தாம் சொல்லவிருக்கும் தூது மொழிகளைத் தூதுபோகும் பறவைகளுக்குச் சொல்லுவதற்கு முன் அவை நினைப்பதையும் கூட்டி ஆழ்வார் பதிலுரைப்பார். அதை நயமாக எடுத்துரைப்பர் காஞ்சீ சுவாமி.

“தம் பிழையும் சிறந்த செல்வமும் படைத்த பரப்பும் தமரோட்டை வாஸமும் பிறப்பித்த க்ஷமா தீக்ஷா ஸாரஸ்ய ஸௌந்தர்யங்களை உணர்த்தும் வ்யூஹ விபவ பரத்வத்வயார்ச்சைகள் தூதுநாலுக்கும் விஷயம்” (156) என்ற ஆசாரிய ஹ்ருதய சூத்திரம் திருவாய்மொழிக் கருத்தினைப் புலப்படுத்துகிறது.

“**நங்கட்கு யானுரைக்கேன் வம்மின்... இதுவோ தக்கவாறென்மினே**” (6.8.5) என்னும் பாடலில் கிளிகளைப் பார்த்துத் தலைவியான பராங்குச நாயகி, தாம் சொல்லப்போகும் தூதுமொழிகளுக்கு முன்பாகக் கிளிகள் கருதியதைக் காட்டுகிறார். அதாவது “நாங்கள் யாரிடம் சொல்லவேணும்” எங்கே சொல்லவேணும்; யாது சொல்ல வேணும்; என்ற கேள்விகளுக்குப் பாடலின் மற்ற மூன்றடிகள் உணர்த்துவதாகக் காஞ்சீ சுவாமி பதிலுரைக்கிறார். இவ்வாறே “**திறங்களாக எங்கும்**” (6.1.3) “**இடரிப் போகும் நீங்கி**” (6.1.4), “**திருந்தக் கண்டு**” (6.1.8), “**இத்தனை வேண்டுவது**” (9.5.1) ஆகிய பாடல்களில் பறவைகளின் நினைவுகளைக் காண முடிகிறது.

**ஆழ்வாரின் திருவுள்ளக்கிடக்கை**

ஆழ்வாருடைய திருவுள்ளம் ஒருகால் பக்தியிலே மூழ்கிக்கிடக்கும்; இன்னொருகால் சரணகதியிலே ஈடுபட்டிருக்கும்; பிறிதொருகால் திருமாலு



டைய பேரழகில் தோற்றுக்கிடக்கும். மற்றொரு கால் அவனுடைய பேராற்றலை வியந்து நிற்கும். இவ்வாறு திருமாலவன் திவ்விய குணங்களிலும் வைணவத் தத்துவங்களிலும் ஆழங்கால்பட்டிருக் கும். ஆழ்வாரின் திருவுள்ளக் கிடக்கை அவருடைய பதிகங்களில் அவ்வப்போது குமிழிட்டுக் கொண்டு சுழன்றிருக்கும். இவற்றை எல்லாம் நம்பிள்ளை முதலான உரையாசிரியர்கள் ஆங்காங்கே எடுத்துரைத்துள்ளனர். அவர்களின் உரைகளில் ஈடுபட்டு உள்ளுணர்ந்த உணர்ச்சி யினை வெளிக்காட்டும் பாங்கில் அவர்தம் அனுபவங்களை காஞ்சீ சுவாமி தம்முடைய தீபிகையுரையிலும் ஆங்காங்கே எடுத்து உரைத்துள்ளார்.

## ஆழ்வார் - இறைவன் உரையாடல்கள்

சில நிகழ்ச்சிகளைப் பின்புலமாக அமைக்க இரு பாடல்களை இணைத்துக் கொள்வர் ஆழ்வார். *''இன்றென்னைப் பொருளாக்கி''* (10.8.9) என்ற பாடலில் ஆழ்வார், இறைவன் தம்மைத் திருநாட் டிலே கொண்டு போவதாக விரைகிறபடியைக் கண்டு, "இன்று என்னைவல்லாதபடி த்வரிக்கின்ற (விரைகின்ற) தேவரீர் இதற்கு முன்பு நெடுநாள் விட்டு ஆறியிருந்தபடி எங்ஙனே? என்று இறை வனைக் கேட்கிறார். அதற்குப் பதில் கூறமாட்டா மல் தலை கவிழ்ந்திட்டு வாய் மூடியிருந்து, ஆழ்வாரே! உமக்கு நான் செய்ய வேண்டுவது யாதென்ன ஆழ்வாரே என்பதற்குப் பதிலாக *''உற்றேன்உகந்து பணி செய்து''* (10.8.10) என்கி றார். இதில் முதல் இரண்டு அடிகள் இறைவனைப் பார்த்துச் சொன்னதாய், முன்னிலைப்படுத்தி "எந் தாய்" என்று அமைந்துள்ளது. அதற்கு இறைவன் தலை தூக்கி உகப்பு தெரிவித்தானாம், அதை எடுத்துச் சொல்லுகின்றன பின் இரண்டடிகள்.

## இலக்கணக்கூறுகள்

திருவாய்மொழி தமிழிலக்கணப்படி அமைந்துள்ளதை நோக்குங்கால் ஆழ்வாருக்குத் தமிழ்ப்பற்று உள்ளதைக் காண முடிகிறது. அவருடைய இலக்கணப் புலமையையும் நமக்குப் புலனாகின்றது. ஆழ்வாருடைய ஆசை பெருகப் பெருகத் திருவாய்மொழியானது கோல் விழுக்காட்டிலே எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய இலக்கணக் கூறுகளோடு அமைந் துள்ளது. *''அளவியன்ற அந்தாதி ஆயிரத்தின்''* என்றும், *''நிரைகொளந் தாதி ஓராயிரத்துள்''* (5.3.11) என்றும் ஆழ்வார் தாமே அருளிச் செய்தமையைக் காணலாம். பன்னீராயிரப்படி உரைகாரரான வாதிகேசரி அழகிய மணவாளச் சீயர் தம் உரையில் தமிழ்ப் புலமையைக் காட்டும் பாங்கில் இலக்கண அமைதிகளையும் அகப்பொருள் துறைகளையும் எடுத்துக் காட்டி உள்ளார். இவற்றிற்குப்பிறகு முன்னோர்கள் சொல்லாது விட்டதைக் காட்டும் பாங்கில் ஆழ்வார் பாடலில் அமைந்த இலக்கணக் கூறுகளையும் ஆரிய மொழி திரிந்த வடசொற்களையும் உலகுக்கு உதவும் வண்ணம் திருவாய்மொழி அமைந்துள்ளது.

*''வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ*
*எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே''*

என்பது தொல்காப்பிய சூத்திரம்.


## திருமொழியின் சிறப்பு

ஆழ்வார்களுள் நம்மாழ்வாருக்கு ஏற்பட்ட ஒப்புயர்வற்ற மேன்மை போலவே இவர் அருளிய திருவாய்மொழிக்கும் மற்றையஅருளிச் செயல்களிற் காட்டிலும் ஏற்றம் உண்டு. ஐந்து பேருரைகள் எழுந்தது மட்டுமின்றி இக்காலத்திலும் காஞ்சீ சுவாமி என்றழைக்கப்படும் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கர் ஆசாரிய சுவாமி போன்ற இருமொழி வல்லுநர்களா லும் பேருரைகள் அமைக்கப்பட்டு உயர்ந்த மதிப்பைப் பெற்றுள்ளது என்பதில் சிறிதும் ஐயமில்லை. திருவாய்மொழிக்குத் தனிப்பட்ட சிறப்பு யாதெனில் மற்றைய திவ்வியப் பிரபந்தங்களைப் போல் வீதிக ளில் சேவிக்கப்படாமல் (ஓதப்படாமல்) இறைவன் முன்பு ஓலக்கத்தி (ஆஸ்தானத்)லேயே ஸேவிக்கப் பட்டு வருகிற மரபு திருவாய்மொழி ஒன்றுக்கே உள்ள பெருமையை இன்றும் காணலாம். இவருடைய பிரபந்தங்கள் நாலுமே ரஹஸ்யத்ரய விவரணமாக வும், அர்த்த பஞ்சக விவரணமாகவும் இருப்பதால் தமிழ்வேதம் என்று குலாவப்படுகின்றன.

இவ்வாறு திருவாய்மொழி இலக்கியச் சிறப்பை ஆராய ஆராய ஒரு பெரிய கடலில் மூழ்கி முத்துக்க ளையும் பவளங்களையும் எடுக்குமாபோலே அவரவர்கள் சிந்தனைக்கு எட்டியவாறு அரிய பெரிய சிறப்பான அமுதத்தைப்பருக வாய்ப்புண்டு.

முற்றும்...

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 72



**இடமிருந்து வலம்**

1. திருமகளை பெருமாள் தன் இடது பாகத்தில் வைத்தபடியால் இத்தலம் ......(7) எனப் பெயர் பெற்றது
7. திருநாராயணபுரம் (மேல் கோட்டை) .... (8)
11. கிஷ்கிந்தையை ஆட்சி செய்தவன்....(2)
13. "சங்க மாகடல் கடைந்தான்" எனப் பாசுரமிட்டவர்.... (4)
14. அர்ச்சுனன் வைத்திருந்த வில்....(5)
15. பாண்டவர்களில் மூத்தவர்....(4)
16. வராக அவதாரம் உள்ள தலம்...(5)
19. ஓர் ஆண்டில் மூன்று பிரம்மோத்ஸவம் காணும் தலம்....(5)

**வலமிருந்து இடம்**

2. வைணவ தலங்களில் பெருமாளுக்கு உகந்த இலை.....(3)
5. உடுப்பியில் கிருஷ்ணரை.... (10)உள்ள ஜன்னல் வழியாகத்தான் தரிசிக்க முடியும்.
6. பெருமாளின் வலது மார்பினில் வாசம் செய்பவள்.....(6)
8. தென்திருப்பதி என்ற சிறப்பு பெயர் பெற்ற தலம்....(6)
10. மூலிகை பிரசாதம் வழங்கும் பெருமாள் தலம்.....(4)
12. அரக்கி தாடகை வீழ்ந்து உயிர் துறந்த தலம்.....(5)
15. காசிப முனிவரின் மகன்......(5)
17. பக்தரின் வேண்டுகோளை ஏற்று பெருமாள் காட்சியளித்த தலம்.....(5)
20. கேரளாவில் இராமருக்கு கோயில் உள்ள ஊர்.......(6)

தொகுப்பு :
திரு. எஸ். ராஜகுமார், சென்னை,
81249 30259

புதிருக்கு விடை அறிய
37ம் பக்கம்
பார்க்கவும்...

**மேலிருந்து கீழ்**

3. ஆதிசேஷன் உருவாக்கிய நகரம்........(10)
4. மகாபலி சக்ரவர்த்தியின் ஆணவத்தை அடக்க திருமால் எடுத்தது.....(8)
9. திருவல்லத்தில் உள்ள சிவபெருமானை பிரதிஷ்டை செய்தவர்..... (6)

**கீழிருந்து மேல்**

17. கணபுரத்தின் கருமணியே என்று பாடிய ஆழ்வார்.....(8)
18. தமிழகத்தின் மூன்றாவது பெரிய கோபுரம்......(7)
21. திருவல்லவாழ் திவ்யதேசத்தில் அருள்புரிபவர்......(5) நாச்சியார்

திருமதி டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி, திருப்பதி



# பெரியாழ்வாரின் “வாத்சல்ய” பக்தி

**“காசினியில் நாம் வாழ கலியுகத்தே வந்துதித்த சான்றோர்கள்” என்று போற்றப் படுபவர்கள் ஆழ்வார்கள். நாடும், வீடும் நலம் பெற வேண்டும் என்கிற உயரிய நோக்கத்தோடு ஸ்ரீமந்நாராயணனே பர தெய்வம் என்னும்படியாக ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களே “தமிழ் வேதம்” எனப்படும் நாலாயிர திவ்யப் பிரபந்தங்கள். நமது பாரத தேசத்திலுள்ள திவ்ய க்ஷேத்திரங்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களை மங்களாசாசனம் செய்தவர்கள் பன்னிரு ஆழ்வார்கள்.**


**அந்த பகவானுக்கே என்ன தீங்கு வருமோ என்று அஞ்சி எம்பெருமானுக்கே திருவந்திக் காப்பு செய்தவர் விஷ்ணு சித்தர் எனும் பெரியாழ்வார்.**

**அந்த திருவந்திக் காப்பு,**

*“பல்லாண்டு பல்லாண்டு*
*பல்லாயிரத்தாண்டு*
*பல கோடி நூறாயிரம்*
*மல்லாண்ட திண்தோள்*
*மணிவண்ணா*
*உன் சேவடி செவ்வி திருக்காப்பு”*

ஈரேழு, பதினான்கு லோகங்களுக்கும் அதிபதியான பரப்ரம்ம ஸ்வரூபத்தை “பரப்ரம்மம்” என்று அறியாது வளர்த்தவள் யசோதைப் பிராட்டி. ஆயினும் பெரியாழ்வாரோ அந்த பரப்ரம்மமே மூலப்பொருள். “ஆதியும் அவனே, அந்தமும் அவனே” என்பதை முழுமையாக உணர்ந்து கொண்ட மகான், அவ்வாறு தெரிந்திருந்தும் அந்த மூலப்பொருளைத் தன்னுடைய குழந்தையாகவே நினைத்து பாசுரங்களை இயற்றியுள்ளார் என்றால் அவர் அந்த ஆயர்பாடிக் கண்ணன் மீது வைத்திருந்த வாத்சல்ய பக்தி நமக்குத் தெள்ளத் தெளிவாக விளங்குகிறது. மற்ற ஆழ்வார்கள் அனைவரும் பகவான் தங்களைக் காக்க வேண்டும், ரக்ஷிக்க வேண்டும், திருவருள் தர வேண்டும் என்று பாசுரமிடும் போது, இவர் மட்டும் தானே யசோதையாக மாறி கண்ணனைத் தாலாட்டி, சீராட்டி, காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டதால் இவர் ஆழ்வார்களுள் பெரியாழ்வார். மற்ற ஆழ்வார்கள் எம்பெருமானின் திருமேனி அழகைக் கண்டு, தாங்களாகவே பெண்களாக மாறி, அதன் மூலம் சுகம் காண விரும்பும் போது, இவரோ அதே திருமேனி அழகைக் கண்டு, அந்த அழகுக்கு கண் திருஷ்டி பட்டு விடுமோ என்று அந்த





தெய்வீக அழகுக்கு பல்லாண்டு பாடி வாழ்த்திப் பாடியதால் இவர் பெரியாழ்வார் தானே.

பக்தி யோகத்தில் பெரியாழ்வார் ஏற்றுக் கொண்ட பக்தி "வாத்ஸல்ய பக்தி". அதாவது ஸ்ரீகிருஷ்ணனையே தன்னுடைய குழந்தையாக பாவித்துக் கொண்டு, தன்னை ஆயர்பாடியின் தலைவனான நந்தகோபனின் மனையாளான யசோதாப் பிராட்டியாகவே உருவகித்துக் கொண்டு அவர் செய்துள்ள பாசுரங்கள் தேனினும் இனிமையானது. கோகுலத்தில் கண்ணன் பிறந்தது முதற்கொண்டு கண்ணனுக்குப் பேரிட்டதையும், தொட்டிலில் இட்டு தாலாட்டியதையும் கண்ணனை நீராட அழைத்ததையும், குழல் வாருவதும், பூச்சூட்டியதையும், உணவு ஊட்டியதையும், மாடு, கன்றுகளை மேய்த்து விட்டு மாலையில் திரும்பும் கண்ணனுக்குத் தீக்கண்களின் திருஷ்டி எதுவும் படாமலிருக்கத் திருவந்திக் காப்பு செய்வதுமாக அவர் பாடிய பாசுரங்கள் ஒவ்வொன்றும் பக்தி என்கிற கடலில் விளைந்த முத்துக்கள். அவை நம்மை கண்ணன் ஓடி, ஆடிய அந்த ஆயர்பாடிக்கே கொண்டு சென்று விடுகின்றன. அவற்றுள் ஒரு சில பாசுர வரிகளை இங்கு நினைவு கொண்டு அவைகளின் மூலமாக நாம் அந்த கண்ணனை, பால கோபாலனை காண்போம்.




*"வண்ண மாடங்கள் சூழ் திருக்கோட்டியூர்*
*கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்"*

*"ஓடுவார், விழுவார், உகந்தாலிப்பார்*
*நாடுவார் நம்பிரான் எங்குத் தானென்பார்*
*பாடுவார்களும், பல்பறை கொட்ட நின்று*
*ஆடுவார்களும் ஆயிற்றாய்ப் பாடியே"*

என்று கண்ணபிரான் பிறந்ததை கோப, கோபியர்களோடு சேர்ந்து தானும் குதூகலித்தார். அடுத்தபடியாக பிறந்த குழந்தைக்குப் பெயரிடுகிறார்களாம். ஆயர்பாடியில் அது பெரும் விழா.

*"பத்து நாளும் கடந்த இரண்டாம் நாள்*
*எத்திசையும் சயமரம் கோடித்து*
*மத்தமாமலை தாங்கிய மைந்தனை*
*உத்தானஞ்செய்து உகந்தனர் ஆயரே"*




இதை அடுத்து தொட்டிலிடுதல். தானே யசோதைப் பிராட்டியாகி அவர் பாடிய தாலாட்டு இதோ பாசுரமாக விரிகிறது.

*மாணிக்கம் கட்டி வயிரம் இடை கட்டி*
*ஆணிப் பொன்னால் செய்த வண்ணச் சிறுதொட்டில்*
*பேணியுனக்குப் பிரமன் விடுதந்தான்*
*மாணி க்குறளனே! தாலேலோ*
*வையம் அளந்தானே! தாலேலோ*

என்ற பரப்பிரும்மத்தை தொட்டிலில் இட்டுத் தாலாட்டினார். இதன் பிறகு பெரியாழ்வார் குட்டிக் கண்ணனை நீராட அழைக்கும்அழகே அழகு.

*''வெண்ணேயளைந்த குணுங்கும் விளையாடு புழுதியும் கொண்டு...''* இதையடுத்த ஒரு பாசுரத்தில் கண்ணனின் மாமன் மகளும், அடுத்த வீட்டுப் பெண்ணுமான நப்பின்னைப் பிராட்டியைக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். அதில்,



*''பூணித் தொழுவினில் புக்குப் புழுதியளைந்த பொன்மேனி...''* ஆஹா, என்ன அழகான கற்பனை. சாதாரணமாக சிறு குழந்தைகளுக்கு இன்னொரு குழந்தை உன்னைப் பார்த்து சிரிக்கும் என்று சொன்னால் அந்த குழந்தைக்கு வெட்கமும், கோபமும் சேர்ந்து வரும். அதிலும் சிரிக்கின்ற குழந்தை பெண் குழந்தையாகவும், மாமன் மகளாகவும் இருந்து விட்டால் கேட்கவே வேண்டாம். ஆகவே, "நப்பின்னை காணில் சிரிக்கும்" என்று சொல்லி நீராட அழைப்பதில் எத்தனை யதார்த்தம் உள்ளது பாருங்கள்.

நீராட்டுவதிலும் அவர் கண்ணனை நீராட்டும் அழகு, மிகவும் கவனமாக குழந்தையின் கண்களில், மூக்கில் நீர் புகாமல், இளஞ் சூடான நீரில் குளிப்பாட்டும் அழகு பாசுரமாக விரிகிறது.




*"கையுங்காலும் நிமிர்த்துக் கடார நீர்..."* என்று யசோதா தேவி பெற்ற பாக்யத்தைத் தான் பெற்ற பாக்யமாக எண்ணிப் பாசுரமிட்டிருக்கிறார்.

அடுத்து நீராடிய குழந்தைக்கு அலங்காரம் செய்ய முற்படுகிறார். கார்மேக வண்ணனான கண்ணனுக்கு குழல்வார கருமை நிறமுள்ள காக்கையை அழைகிறார்.

*''பின்னை மணாளனைப் பேரில் கிடந்தானை...''*

*"பேயின் முலையுண்ட பிள்ளை இவன், முன்னம்..."* என்று பாசுரமிட்டு கண்ணன் சிறு குழந்தையாய் இருக்கும்போதே கம்சனால் ஏவி விடப்பட்ட பூதனை என்கிற அரக்கியை வதம் செய்தது, சகடாசுரனைக் கொன்றது போன்ற பால லீலைகளையும் சேர்த்து இதில் குறிப்பிட்டுள்ளார்.

குழல் வாரியதைத் தொடர்ந்து பால கோபாலனைப் பூச்சூட்டிக் கொள்ள அழைக்கிறார் பெரியாழ்வார். அதிலும் எத்தனை புஷ்பங்கள் பத்து பாசுரங்களுக்கும் பத்து வகையான புஷ்பங்கள்.



*''ஆநிரை மேய்க்க நீ போதி அருமருந்து ஆவது அறியாய்...தேனின் இனிய பிரானே! செண்பகப்பூச்சூட்ட வாராய்''* இந்த பாசுரத்தில் கண்ணன் ஆயர்பாடியில் மாடு, கன்றுகளை மேய்த்ததையும், கோப சிறுவர்களோடு சேர்ந்து மற்றவர்கள் இல்லம் புகுந்து பால், வெண்ணெய் திருடி நண்பர்களுக்குத் தந்து மகிழ்ந்ததையும் குறிப்பிட்டுள்ளார். அடுத்த பாசுரத்தில்,

*''தெருவின் கண் நின்று இளவாய்ச்சிமார்களைத் தீமை செய்யாதே...''* என்று கண்ணன் கோபிகைகளை வம்புக்கிழுத்த குறும்புகளையும் நமக்குச் சுட்டி காட்டுகிறார்.

அப்போது ஒரு கோபிகை கண்ணன் செய்கின்ற குறும்புகளை கண்ணன் தாயாரான யசோதைப் பிராட்டியிடம் சென்று சொல்கிறாளாம்.

*“செந்நெல்லரிசி சிறு பருப்பரிசி செய்த...”* என கண்ணன் வீடுதோறும் சென்று பண்ணின திருவிளையாடலைக் கூறுகிறாள். அதற்குள் இன்னொரு பெண், *“ஆற்றிலிருந்து விளையாடுவோங்களை...”* என்று கண்ணன் தாங்கள் ஆற்றில் நீராடும்போது அலைக்கழித்து வம்புகள் செய்ததை சொல்வதுபோல பாசுரமிட்டு மாய கண்ணனின் பால லீலைகளில் நம்மை மெய்மறக்கச் செய்கிறார்.

இப்படியெல்லாம் விஷமங்கள் செய்கின்ற குழந்தைக்குப் பசிக்காதா? ஆகவே அமுது செய்விக்க வேண்டுமே. ஆனால் அதற்கும் பிடிவாதம் கண்ணன் சாதாரணமாக சாப்பிட மறுக்கும் குழந்தைக்கு வானத்தில் இருக்கும் வெண்ணிலாவைக் காட்டி சோறு ஊட்டுவது நமது தாய்மார்களின் வழக்கமாயிற்றே. இங்கே பெரியாழ்வாரும் அதே போன்று நிலவிடம் பேசுகிறார்.

*“சுற்றும் ஒளிவட்டம் சூழ்ந்து சோதி பரந்தெங்கும்...கைத்தலம் நோவாமே அம்புலி! கடிதோடி வா”* வெண்ணிலாவே உன்னைச் சுற்றி ஒளி வட்டம் சூழ்ந்து நீ வானத்திலே குரு சோதி போல பிரகாசிக்கலாம். இருந்தாலும் எனது மகன் கண்ணனின் ஒளி மிகுந்த திருமுகத்துக்கு நீ ஒரு போதும் ஈடாகமாட்டாய். அந்த குட்டி கண்ணனின் பிஞ்சுக் கைகள் உன்னைக் காட்டி அழைக்கின்றன. அந்த திருக்கைகள் நோகாத வண்ணம் நீ சீக்கிரமாக வந்து விடு” என்கிறாள். இதில் தன் மகனின் கைகள் நோகுமே என்கிற பரிதவிப்பும், கூடவே அவனுடைய அழகுக்கு நீ ஒப்பாக மாட்டாய் என்கிற தாய்க்குரிய பெருமிதமும் சேர்ந்து தெரிகிறது அல்லவா!

இனி சாப்பிடல், மாடு, கன்றுகளை கொண்டு போய் கானகத்தில் மேயவிட்டு மாலையில் வீடு திரும்பும் வேளையில், அந்திப்பொழுதில், ஆதவன் மறையும் நேரத்தில் தீக்கண்களின் மூலமாக திருஷ்டி எதுவும் படாமலிருக்க, தன்னுடைய அழகு நம்பிக்கு ஒரு தாய்க்குரிய பொறுப்போடு திருவந்தி காப்பு செய்கிறார்.

*“இந்திரனொடு பிரமன் ஈசன் இமையவர் எல்லாம்... அழகனே! காப்பிட வாராய்”* அத்தோடு அவர் நிற்கவில்லை.

*“பல்லாயிரவர் இவ்வூரில் பிள்ளைகள் தீமைகள் செய்வார்... உன்மேனி சொல்லார வாய்த்தி நின்று ஏத்திச் சொப்படக் காப்பிட வாராய்”* இந்த பாசுரத்தில் பெரியாழ்வாருக்கு அங்கலாய்ப்பு. ஊரில் யார் எது செய்தாலும் அதை என் மகன் தான் செய்தான் என்று இந்த கோபிகைகள் குற்றம் சொல்கிறார்களே. அது கண்ணனை எப்படிப் பாதிக்குமோ என்று வருந்தி, நல்லோர்களும் சான்றோர்களும் தன் மகனை வாயார வாழ்த்த வேண்டும்” என்று சொல்லிக் காப்பிடுகிறார்.

அதுதான் தாயின் உள்ளம். சாதாரணமாக நம்முடைய குறைகளை நாம் எம்பெருமானிடத்தில் கூறுவோம். ஆனால் அந்த லோகரக்ஷணனுக்கே குறைவொன்றும் வராமலிருக்க பல்லாண்டு பாடிய பெரியாழ்வாரின் பொன்னடிகளைப் போற்றுவோம்.

---

**கண்ணன் கருத்துரை**



*நாதத்தே கஸ்யசி த்பாபம் ந சைவ ஸுக்ருதம் விபு: ।*
*அக்ஞானேனாவ்ருதம் ஞானம் தேன முஹ்யந்தி ஜந்தவ: ॥*

(5-15)

**கடவுளுக்கு வேண்டியவன் வேண்டாதவன் என்று எவரும் இல்லை. ஒருவருடைய பாபத்தையும் புண்ணியத்தையும் அவர் தள்ளி வைப்பதும் இல்லை. அறிவு, அறியாமையால் மறைக்கப்பட்டிருக்கிறது. அதனால் மனிதர்கள் மயக்கம் அடைகிறார்கள்.**



தொகுப்பு:
பேராசிரியர் அமரர் பொன் சௌரிராஜன்,
திருப்பதி.



திருமலை திருப்பதி
தேவஸ்தானம்



# “ஸ்ரீவேங்கடேஸ்வரா அன்னப்பிரசாத அறக்கட்டளை”

*திருமலையிலும், திருச்சானூரிலும் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அன்னப்பிரசாதம் வழங்கப்படுவது அறிந்ததே. தற்பொழுது தி.தி.தே. அன்னப்பிரசாத அறக்கட்டளை பக்தர்களுக்கும், நன்கொடையாளர்களுக்கும் இதற்கு நன்கொடை அளிக்க நல்வாய்ப்பினை நல்குகின்றது. அதுவே,*

## ஒரு நாள் நன்கொடை திட்டம்

| | | |
|---|---|---|
| 1) | காலை சிற்றுண்டி | - 7 இலட்சம் |
| 2) | மதிய உணவு | - 11.5 இலட்சம் |
| 3) | இரவு உணவு | - 11.5 இலட்சம் |
| | மொத்தம் | - 30 இலட்சம் |

0877-2264258
0877-2264375
0877-2264237

திருமலை திருப்பதி தேவஸ்தான அன்னப்பிரசாத அறக்கட்டளை இத்தொகையை நன்கொடையாளர்களிடமிருந்து பெற விழைகிறது. நன்கொடையாளர் / தனிப்பட்ட நபர் / நிறுவனங்கள் / நிறுமங்கள் / அறக்கட்டளைகள் இணைந்தும் இருக்கலாம்.

இவர்கள் ஒரு நாளைக்கு மொத்தம் ரூ.30 இலட்சமோ/காலை சிற்றுண்டிக்கு ரூ.7 இலட்சமோ/மதிய உணவிற்கு ரூ.11.5 இலட்சமோ/இரவு உணவிற்கு ரூ.11.5 இலட்சமோ அளிக்கலாம்.

தி.தி.தேவஸ்தானம் நன்கொடையாளர்களுக்கு அளிக்கும் வசதிகள் ஒரே விதமாகவே இருக்கும்.

**மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும் :**

**“ ஸ்ரீவேங்கடேஸ்வரா அன்னப்பிரசாத அறக்கட்டளை, தி.தி.தேவஸ்தானம் நிர்வாகக் கட்டிடம், கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி ”**

www.tirumala.org என்ற இணையதளத்திலும் விவரங்களைக் காணலாம்.

# நவக்கிரகங்கள் குரு

முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி,
சென்னை, 94443 92595

**நவக்கிரகங்கள் - குரு**

குரு புத்திக்காரகன் என்றழைக்கப்படுகிறார். மந்திரம், ஞாபக சக்தி, வேதமந்திர சாஸ்திர அறிவு, யானை குதிரை போன்ற வாகன அந்தஸ்து, பணம், பிராமண உபசாரம் போன்றவை அனைத்திற்கும் காரகன் ஆகிறார். குரு பார்வை கோடி புண்ணியம், இவரின் பார்வையால் அனைத்து தோஷமும் நீங்கும். ஆனால் குரு அமர்ந்த இடம் கெட்டு விடும். நவக்கிரகங்களின் குருவாக விளங்குபவர் வியாழ குரு பகவான். குரு தோஷங்கள் விலகிட ஆலங்குடி சென்று வழிபடலாம். 24 நெய் தீபங்கள் ஏற்றி 24 தடவை வலம் வர வேண்டும். குரு பகவானுக்கு வியாழக் கிழமையில் அபிஷேகம் செய்வித்து மஞ்சள் நிற வஸ்திரம், வெண்முல்லை ஆகியவற்றால் அலங்காரம் செய்து, எலுமிச்சம் பழம், அன்னம் நிவேதிக்க வேண்டும். குருவருள் திருவருள் என்பார்கள். குருபகவான் என்று சிறப்பித்து கூறப்படும் குரு பார்க்க கோடி நன்மை. குருபார்வை அதாவது வியாழ நோக்கம் வந்தால் திருமணம் மற்றும் சுபகாரியங்கள் செய்யலாம் என்ற வழக்கமுள்ளது.

சுபகிரக வரிசையில் முதன்மையராகப் பேசப்படும் குருபகவான் ஆட்சி வீடுகள் மீனம், தனுசு. உச்ச வீடு கடகம், நீச வீடு மகரம். குருபகவான் ஆட்சி அல்லது உச்சம் பெற்று சூரியனோடு இணைந்து 6,8,12வது இடங்களில் மறைவு பெறாமல் அமைந்தால் ராஜ யோகம், கோடீஸ்வர யோகம் அமையும். மேதைகளையும், ஞானிகளையும் உருவாக்குவது குருபகவான். பிரகஸ்பதி என்று குரு கிரகத்தை அழைப்பார்கள், இதன் பொருள் ஞானத்தலைவன் என்பதாகும். விவேகத்தையும், ஆற்றலையும், அந்தஸ்தையும், புத்திர பாக்கியத்தையும் வாரி வழங்குவார். பஞ்ச பூதங்களில் ஆகாயம் குருபகவான். கன்னி லக்னமாக அமைந்து, குரு 3ல் அமர்ந்து பாவக்கிரகங்கள் பார்த்தாலோ– சேர்ந்தாலோ இரண்டு மனைவிகள் அமைவர். குருபகவான் ஜாதகங்களில் சிறப்பாக அமைந்தால் நல்ல குடும்பம், நல்ல கணவன்/மனைவி, செல்வ செழிப்பு அனைத்தும் கைக்கூடி வரும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடிவரும். தெய்வ அருள் கிடைக்கும். ஜோதிட ஞானத்தை குரு வாரி வழங்குவார். அறிவில் சிறந்த குழந்தைகளை அருளுவதும் குருபகவான்தான்.

பிரகஸ்பதி, வியாழன், பொன்னன், பிதாம்பர் என்ற பெயர்களால் அழைக்கப்படும் குருபகவான் தெய்வீக அறிவிற்கும் ஞானத்திற்கும் அதிபதி. குருபார்க்க கோடி நன்மை என்ற பழமொழி ஒன்றே குருவின் பெருமையை விளக்கப் போதுமானது. தலைமைத்தாங்கும் தகுதியை அளிப்பவரும் இவரே. அந்தணர் மற்றும் பசுக்களுக்கு அதிபதி இவர். மஞ்சள் நிறத்தையும், சாத்வீக குணத்தையும் கொண்டவர். புத்திர காரகனும், தனகாரகனும் இவரே. ஒருவருக்கு திருமணம் செய்ய குருபலம், பார்வை அவசியம். ஒருவர் நல்லவரா கெட்டவரா என்பதை குருவின் நிலையை வைத்து கூறிவிட முடியும். வடக்கு திசை குருவிற்குரியது. குருவின் தலம் ஆலங்குடி. பிரம்மன் இவருக்கு அதிதேவதை, புஷ்பராகம் இவருக்கு உகந்த ரத்தினம்.

*நச்சித்தொழுவீர்கணமக்கிது சொல்லீர்*
*கச்சிப் பொலி காமக்கொடி யுடன்கூடி*
*இச்சித் திரும்பூளை யிடங் கொண்டஈசன்*
*உச்சித் தலையில் பலிகொண்டுழலூணே*



எனத் திருஞானசம்பந்தர் தமது தேவார பதிகத்தில் பாடியுள்ள இத்திருத்தலம் பாடல்பெற்ற காவிரி தென்கரைத் தலங்களில் 98வது தலமாகும். தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம்–நீடா மங்கலம் –மன்னார்குடி நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இத்தலம் இரும் பூளை, திருவிரும்பூளை என்றும் அழைக்கப்படுகிறது. இறைவன் அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர், இவர் காசி ஆரண்யேஸ்வரர் என்றும் அழைக்கப்படுகிறார். உற்சவர் – தக்ஷிணா மூர்த்தி, இறைவி ஏலவார்குழலி அம்மன், தல விருட்சம் – பூளைச்செடி, தலதீர்த்தம் – அமிர்த பொய்கை, பிரம்ம தீர்த்தம். உலோகம்– பொன், தானியம்–கொண்டைக் கடலை, பால் –ஆண், திசை காலம் –16 வருடங்கள், கோசார காலம் – 1 வருடம், நட்பு– சூரியன், சந்திரன், செவ்வாய். பகை–புதன், சுக்கிரன். சமம்–சனி, ராகு, கேது. உபகிரகம்–எம கண்டன், நட்சத்திரம்–புனர்பூசம், விசாகம், பூரட்டாதி.

**பிரார்த்தனை:**

நாகதோஷம், பயம், குழப்பம் நீங்க இங்குள்ள விநாயகரையும், திருமணத்தடை நீங்க, கல்வி கேள்விக ளில் சிறந்து விளங்க இத்தல இறைவனையும் பிரார்த்தனை செய்கின்றனர். பிரார்த்தனை நிறைவேறியதும், இறைவ னுக்கு அபிஷேகம் செய்தும், புது வஸ்திரங்களை அணி வித்தும் நேர்த்திக் கடனை நிறைவேற்றுகின்றனர்.

**தலப்பெருமை:**

ஆலங்குடி ஆபத்சகாயேஸ்வரர் ஆலயத்தில் ஒவ்வொரு ஆண்டும் மாசிமாத வியாழக்கிழமையில் மட்டுமே குருபகவானுக்கு அபிஷேகம் நடைபெறும். ஒரு காலத்தில் பாசிபடியாத தாலிக்கயிறை கூட மாசிமாதத்தில் மாற்றி விடுவார்களாம் பெண்கள். குருபலம் இருப்பவர் களுக்கு மாங்கல்ய பாக்கியம் நீண்டகாலம் நிலைத்திருக் கும். அந்த குரு பகவானுக்கு மாசியில் அபிஷேகம் நடப்பது சிறப்பிலும் சிறப்பு. குருபெயர்ச்சி நாளைவிட இந்த நாள் விசேஷ சக்தி வாய்ந்த நாளாக கருதப்படுகிறது. தக்ஷிணா மூர்த்தியே இங்கு குருவாய் இருந்து சனகாதி முனிவர்களுக்கு உபதேசிக்கிறார். இவரையே குருவாக கருதி வழிபட்டு செல்கின்றனர். ஆலகால விஷத்தை இறைவன் அருந்தி தேவர்களை காத்த தலம். இதனால் ஆலங்குடி என்றாயிற்று என்பதற்கு கவி காளமேகப்புலவர் பாடல் ஆதாரமாகக் கூறலாம். அப்பாடல் வருமாறு,

*ஆலங்குடியானை ஆலாலம் உண்டானை*
*ஆலங் குடியான் என்று ஆர் சொன்னார்-ஆலம்*
*குடியானேயாகில் குவலத்தோரெல்லாம்*
*மடியாரோ மண் மீதினில்*



இவ்வூரில் விஷத்தால் எவருக்கும் தீங்கு உண்டாவதில்லை என்று கூறப்படுகிறது. கரு நீல நிறமுள்ள பூளைச் செடியை தல விருட்சமாகக் கொண்டுள்ளதால் திருஇரும் பூளை என்றும், ஆலமரத்தின் கீழிருந்து அறமுரைத்த பெருமான் தலமாதலாலும், திருப்பாற்கடலில் அமுதம் கடைந்தபோது தோன்றிய ஆலகாலத்தை உண்டு அமரர்களை காத்தருளியவர் வீற்றிருப்பதாலும் ஆலங்குடி என்று பெயர் ஏற்பட்டது. திருவிடை மருதூர் மகாலிங்கப் பெருமானுக்குரிய பரிவாரத் தலங்களில் இது தக்ஷிணாமூர்த்திக்கான தலம். பஞ்ச ஆரண்ய தலங்களிலும் ஒன்று.

தக்ஷிணாமுர்த்தி உற்சவராக தேரில் பவனி வருவது இங்கு மட்டுமே. இம் மூர்த்தியை வியாழக்கிழமையில் வழிபட அனைத்து நலங்களையும் பெறுவர். நாக தோஷம் உடையவர்கள் இத்தல பெருமானை வழிபட தோஷம் நீங்கும். இவ்வாலயத்தின் வெளிப் புறத்தில் பார்வதியின் தந்தை தட்சன் சாபத்திற்கு ஆளாகி ஆட்டுத் தலையுடன் காட்சியளிக்கிறார்.

தொடரும்...



# திருப்புகழ் போற்றும் தணிகைவேலன்

முனைவர் ஆ.செந்திலாண்டவன், சென்னை,
94445 82856

சான்றோர்களும், கவிஞர்களும், அறிஞர்களும் போற்றும் திருப்புகழ் பாடல்களைத் தலங்கள் தோறும் சென்று, இசைத்தமிழ் பாடியவர், அருணகிரி நாதர். முருகனின் வீரத்தையும், பெருமைகளையும், உயிர்களைக் காத்தலையும், அடியார்க்கருளும் மேம்பாடுகளும் பாடல்கள்தோறும், படிப்பவர் மனங்கொள்ளுமாறு பாடியுள்ளார்.

முருகப்பெருமானை, ஒரு தலத்திற்கு உரியவனாகக் கருதாமல், உலகம் முழுவதும் போற்றி வழிபடத்தக்க இறைவனாகக் கண்டுள்ளார் என்பது இவரது பாடல்களால் அறியலாகும் சிறப்புத் தன்மையாகும்.

திருத்தணி, திருத்தணிகை என்றெல்லாம் சிறப்புற அழைக்கப்படும், இத்தலத்தில் முருகப் பெருமானை, ஆயக்கலைகள் அறுபத்து நான்கு என்பது போல 64 பாடல்களால் போற்றி மகிழ்ந்துள்ளார். அவற்றில் ஒரு சில பாடல்களில் தணிகைவேலன் சிறப்பினை எவ்வாறு பாடி மகிழ்ந்துள்ளார் என்பதை மகிழ்ந்து காண்போம்.

*“சினத்தையும் உடற்சங்கரித்த மலைமுற்றும்
சிரித்தெரி கொளுத்துங் - கதிர்வேலா!
தினைக்கிரி குறப்பெண் தனத்தினில் சுகித்தெண்
திருத்தணி யிருக்கும் - பெருமாளே!”*

முருகப்பெருமானின் புகழைப் போற்றி ஓதும், அடியவரிடம், சினம் கொண்டவரின் தலைக்கும் அந்த அடியாருடன் பகை கொண்டவரின் குடிக்கும், கொல்பவரின் உயிர்க்கும், சினத்துடன் பார்த்து, சிரிப்பவர்க்கும், பழித்துக் கூறுபவர்க்கும் “திருப்புகழ் நெருப்பாக எரித்துவிடும்” என்பதை நாம் அறிவோம்.

எம்பெருமான் தணிகை வேலனின் திருப்புகழ் நினைத்ததை எல்லாம் தருகின்ற வல்லமை உடையது; ஓதுபவரின் உள்ளத்தை உருக்கும்! இருண்ட கருவை இனிப் பிறவாதபடி அழிக்கும்! (அதாவது முருகனடியார்கள் பிறப்பை அறுத்து பேரின்ப வீடு நல்கும்) நெருப்பையே அழிக்கும் திறன் வாய்ந்தது திருப்புகழ்.

மலையையும் பொடியாக்கும்! ஆகவே நின்புகழ் பாடும் பணியை எனக்கு அளிப்பாயாக! என்று அருணகிரியார் பாடுகின்றார். வாழ்க்கையில் எண்ணியதெல்லாம் கிடைக்க வேண்டுமானால், நாமும் இத்திருப்புகழை பக்தியோடு பாடி நல்வரம் பெறலாம்.

## இருப்பவல் திருப்புகழ்

விழிக்குத்துணை, முருகனுடைய மென்மலர்ப் பாதங்கள்! பொய்மை இல்லாமல் மெய்மையே பேசும் அடியார்களுக்கு முருகனுடைய நாமங்களே கந்தன், கடம்பன், கார்த்திகேயன், முருகன், மால்

முருகன், குமரன், குகன் போன்ற எண்ணற்ற நாமங்களே துணையாக உள்ளன. முன்வினையிலும், இம்மைப் பிறவியிலும் அறிந்தோ அறியாமலோ செய்த பழி கூறும் செயல்களுக்கெல்லாம் அஞ்சி நடுங்கும்போது, முருகனுடைய பன்னிரு கைத் தோள்களும் துணையாக வருகின்றன.

உயிர்ப்போகும் காலத்திற்கும், சேமிப்பாக இருந்து, தனி வழிக்கு உறுதுணையாக உதவுகின்ற அவல் போன்றது, இரும்பு போன்ற வன்மையும் உடைய, இருப்பவல் ஆகிய உன் திருப்புகழே எங்களுக்குத் துணை! திருத்தணி வாழ் பெருமானே என்றும் அருணகிரியார் போற்றிப் பாடுகிறார்.

இத்திருத்தணி மாமலை மெய்யான தவமுனிவர்கள் வாழும் பெரும்பதி! அத்தலத்தில் வாழும் எங்கள் அரசே! தம்பிரானே! எனக்கு நீ உனது திருவடி தீட்சை தர வேணும்! என்றும் அருணகிரியார் வேண்டுகின்றார். அடியார்களை, தன்னை மெய்யன்போடு வணங்கும் அடியார்களுக்கு திருத்தணி முருகன், தணிகை வேலன் – நல்வாழ்வு தருவான்.

### அடியார்கள் தழைக்க அருள் செய்பவன்

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்று இவற்றிலேயே மதிமயங்கிக் கிடக்கின்றவர்களை மேற்கூறிய எல்லா ஆசைகளிலிருந்தும் விடுபடச் செய்து, மரகதம் போல் ஒளிரும் பச்சை மயில் வாகனம் மீது எழுந்தருளி வந்து முத்தி தர வேணும் பெருமானே!

நிலை பெற்ற அழகோடு, தினம் காட்சி அளிக்கின்ற, சித்திர நெடிய குன்றமாகிய திருத்தணி மலைமேவுப் பெருமானே' என்று உன்னை வணங்கும் அடியார்கள் வாழ்க்கையைத் தழைக்கச் செய்வாய்!

# பூரி ஜெகந்நாத ஸ்வாமி ரதயாத்திரை

பூரி ஜெகந்நாதர் கோயில் ஒடிசா மாநிலத்தில் கடற்கரையில் அமைந்துள்ள மிகப் பெரிய கோயில். பல சந்நிதிகள் உள்ளன. இக்கோயில் ஒரு சிறிய குன்றின் மீதுள்ளது, 22 படிகள் ஏறி எம்பெருமானை தரிசனம் செய்ய வேண்டும். ஆதிசங்கரர் இங்கே ஒரு மடம் அமைத்துள்ளார். இக்கோயிலில் பிரசித்தி பெற்றது பிரசாதமாகும். இங்கே பலவிதமான பிரசாதம் செய்வார்கள். இங்கு ரதயாத்திரை மிகவும் பிரபலமானது. எம்பெருமான் கிருஷ்ணருக்கும், அவருடைய அண்ணன் பலராமருக்கும், தங்கை சுபத்திரைக்கும் தனித்தனியாக ஒவ்வொரு வருடமும் புதிதாக ரதம் தயாரித்து, அழகு வண்ணங்கள் தீட்டி எம்பெருமானை குண்டிசா ஆலயத்திற்கு அழைத்துச் செல்வார்கள். இதைக் காண பலவிடங்களிலிருந்தும் பக்தர்கள் திரண்டு வருவார்கள். இவ்வாறு தேர் திருவிழா கொண்டாடும் உலகிற்கு நாயகனாக விளங்கும் ஜெகந்நாதரின் அருளைப் பெற்று நாமும் வளமாக வாழ்வோமாக.



வெற்றி வேலனே! என்று தணிகைத் திருப்புகழ் – 28 வது பாடலில் கல்லும் கனியும் வண்ணம் அருணகிரி நாதர் அருளிச் செய்துள்ளார்!

### நோய்தீர்க்கும் மருத்துவன் தணிகைவேலன்

வந்த வினையும் வருகின்ற வல்வினையும் கந்தனென்று சொல்லக் கலங்குமே! என்பது முருகன் அடியார்களின் ஆழமான நம்பிக்கை. அருணகிரி நாதர், ஒரு மந்திரத் திருப்புகழ் – தணிகை வேலன் மேல் பாடுகின்றார். இந்த உலகில் உள்ள நோய்கள் எல்லாம், பிறவிகள் தோறும் வந்து என்னை நலியச் செய்யாமல் இருக்க வேண்டும் முருகா!

*"இருமலு ரோகம்...*
*பெருவலி வேறும் - உள நோய்கள்*
*பிறவிகள் தோறும் எனை நலியாத*
*படி உன தாள்கள் அருள்வாயே!"*

தெய்வானை மணவாளா! தணிகைமலைப் பெருமானே மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீரா நோய் தீர்க்கின்ற வல்லாளனே! என்று வேண்டும் அடியார்க்கெல்லாம் அவனே மருத்துவன்! உடற்பிணி மட்டுமல்ல, பிறவிப் பிணியும் தீர்ப்பவன் முருகன்.

### வள்ளி-தெய்வானையுடன் சேர்ந்திருக்கும் வேலவன்

திருத்தணிகை மலையில் முருகப் பெருமான் இருதேவியர்களோடும் அருட்காட்சி அளிக்கின்றான்! அவனருள் பெற்ற புலவர்கள் எல்லாம் அவ் வேலனைப் பாடிய வண்ணம் உள்ளனர். சிவபெருமானும், திருமாலும் நான்முகனும் முப்பத்து முக்கோடித் தேவர்களோடு வந்து தொழுகின்றார்கள். அந்த அருட்காட்சியை அருணகிரியார் தம் திருப்புகழில்,

*"சிலைமகள் நாயன்! கலைமகள் நாயன்!*
*திருமகள் நாயன் தொழும் வேலா!*
*தினைவன மாலும் கனவன மானும்*
*செறிவுடன் மேவும் திருமார்பா!*
*தலமகள் மீதெண் புலவர் உலாவும்*
*தணிகையில் வாழ்செங்-கதிர்வேலா!"*

என்று அழகுறப்பாடி, நம்மையும் திருத்தணிகை மலை சென்று தணிகைவேலன் திருவடியைப் பற்றிக் கொள்ளுங்கள்! அவ்வேலன், வேண்டுவார் வேண்டியபடி அருள்தரக் காத்திருக்கின்றான் என்று ஆற்றுப்படுத்துகின்றார்! அருள் பெறுவோம்.

*"ஆறுமுகம் தோன்றும்! அழகிய வேல் தோன்றும்!*
*ஏறுமயில் தோன்றும்! எழில் தோன்றும்!-சீறிவரு*
*சூரன் முடியைத் துணித்தோன் திருப்புகழைப்*
*பாரில் வழுத்தினோர் பால்!"*
*வேலுண்டு வினையில்லை! மயிலுண்டுபயமில்லை*
*குகனுண்டு குறைவில்லை!"*







## மங்கள சுலோகங்கள்

*யந்மூலே ஸர்வ தீர்த்தானியந்மத்யே ஸர்வ தேவதாஹா ।*
*யதக்ரே ஸர்வவேதாஸ்ச துளஸீம் தாம் நமாம்யஹம் ॥*



**எதன் அடியில் எல்லாத் தீர்த்தங்களும், எதன் நடுவில் எல்லாத் தேவதைகளும் எதன் நுனியில் எல்லா வேதங்களும் உள்ளனவோ அந்த துளசியை நான் வணங்குகிறேன்.**

# ஸ்ரீவேதாந்த தேசிகன் அருளிச் செய்த ஸ்ரீசுதர்சநாஷ்டகம்



*ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய:*
*கவிதார்க்கிக கேஸரீ |*
*வேதாந்தாசார்யவர்யோ மே*
*ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ||*

*ப்ரதிபட ச்ரேணி பீஷண வரகுண ஸ்தோம பூஷண*
*ஜநிபய ஸ்த்தாந தாரண ஜகதவஸ்த்தாந காரண |*
*நிகில துஷ்கர்ம கர்சந நிகம ஸத்தர்ம தர்ஸந*
*ஜயஜய ஸ்ரீ ஸுதர்சந ஜயஜய ஸ்ரீ ஸுதர்சந ||* (1)

எதிரிகளின் கூட்டத்துக்கு அச்சத்தைத் தருமவரே! உயர்ந்த குணங்களின் கூட்டத்தை அலங்காரமாகக் கொண்டவரே! அச்சத்திற்கு இடமான பிறவியினின்று மீட்பவரே! உலகம் நிலை நிற்பதற்கு காரணமாயுள்ளவரே! சகலமான பாபங்களையும் ஒழிப்பவரே! வேதங்கள் கூறிய உயர்ந்த தர்மங்களை காட்டுபவரே! திருவாழியாழ்வானே! வெற்றிகொண்டு விளங்க வேண்டும்.

*சுப ஜகத்ரூப மண்டந ஸுர கண த்ராஸ கண்டந*
*சத மக ப்ரஹ்ம வந்தித சதபத ப்ரஹ்ம நந்தித |*
*ப்ரதித வித்வத் ஸபக்ஷித பஜத ஹிர்புத்ந்ய லக்ஷித*
*ஜயஜய ஸ்ரீஸுதர்சந ஜயஜய ஸ்ரீஸுதர்சந||* (2)

மங்களமான உலகை வடிவமாகக் கொண்ட பகவானுக்கு அலங்காரமாயிருப்பவரே! தேவர் குழுவின் அச்சத்தை ஒழிப்பவரே! நூறு யாகம் செய்த இந்திரனாலும் பிரமனாலும் வணங்கப்பட்டவரே! சதபத ப்ராஹ்மணத் தால் கொண்டாடப் பெற்றவரே! புகழ் பெற்ற வித்வான்களால் அநுகூலராக்கிக் கொள்ளப் பெற்றவரே! வழி படுகின்ற அஹிர்புத்ந்ய ரென்னும் சிவனால் காணப்பட்டவரே. திருவாழியாழ்வானே! மேன்மேலும் வெற்றி கொண்டு விளங்குக.

*ஸ்ப்புட தடிஜ்ஜால பிஞ்ஜர ப்ருதுதர ஜ்வால பஞ்ஜர*
*பரிகத ப்ரத்ந விக்ரஹ படுதர ப்ரஜ்ஞ துர்க்ரஹ|*
*ப்ரஹரண க்ராம மண்டித பரிஜந த்ராணபண்டித*
*ஜயஜய ஸ்ரீ ஸுதர்சந ஜயஜய ஸ்ரீஸுதர்சந||* (3)

பிரகாசிக்கின்ற மின்னல் கூட்டம் போல் பொன் வடிவமானவரே! மிகப் பெரிய கொழுந்துகளாகிய கூட்டையுடையவரே! சுற்றிலும் உள்ள (வாஸுதேவன் முதலிய) சிறந்த திருமேனிகளையுடையவரே! மிகக் கூர்மையான அறிவுடையராலும் அறிய முடியாதவரே! ஆயுதங்களின் கூட்டத்தால் அழகுபடுத்தப்பெற்றவரே! அடியார்களை காப்பதில் நிபுணரே! திருவாழியாழ்வானே! மேன்மேலும் வெற்றி கொண்டு விளங்குக.





நிஜ பத ப்ரீத ஸத்கண நிருபதி ஸ்ப்பீத ஷட்குண
நிகம நிர்வ்யூட வைபவ நிஜ பர வ்யூக வைபவ।
ஹரிஹய த்வேஷி தாரண ஹர புர ப்லோஷ காரண
ஜயஜய ஶ்ரீ ஸுதர்சந ஜயஜய ஶ்ரீ ஸுதர்சந॥ (4)

தம் திருவடிகளில் பக்தி கொண்ட சாதுக்களின் குழுவையுடையவரே! இயற்கையாக நிரம்பிய ஆறு குணங்களையுடையவரே! வேதங்களால் ஸ்தாபிக்கப் பட்ட பெருமையையுடையவரே! தம்முடையதான பரம் வ்யூஹம் ஆகிய திருமேனியின் பெருமையை யுடையவரே! இந்திரனுடைய பகைவர்களை ஒழிப்பவரே! சிவனது பட்டணம் வெந்து போனதற்கு காரணமாய் நின்றவரே! திருவாழியாழ்வானே! மேன்மேலும் வெற்றி கொண்டு விளங்குக.





தநுஜ விஸ்தார கர்த்தந ஜநித மிஸ்ரா விகர்த்தந
தநுஜ வித்யா நிகர்த்தந பஜத வித்யா நிவர்த்தந|
அமர த்ருஷ்டஸ்வ விக்ரம ஸமர ஜுஷ்ட ப்ரமிக்ரம
ஜயஜய ஸ்ரீ ஸுதர்சந ஜயஜய ஸ்ரீ ஸுதர்சந|| (5)

அசுரர்களின் வளர்ச்சியை அறுப்பவரே! சம்சாரமென்னும் இருள் நிறைந்த இரவுக்கு சூரியனாய் நிற்பவரே! அசுரர்களின் மாயையை அடியோடு ஒழிப்பவரே! ஆச்ரயிப்பவர்களின் அஞ்ஞானத்தை போக்குமவரே! தேவர்களால் காணப்பெற்ற தம் வீர்யத்தையுடையவரே! போரில்கைக் கொண்ட சுழற்சிமுறைகளை உடையவரே! திருவாழி ஆழ்வானே! மேன்மேலும் வெற்றி கொண்டு விளங்குக.



*ப்ரதி முகாலீட பந்துர ப்ருது மஹா ஹேதி தந்துர*
*விகட மாயா பஹிஷ்க்ருத விவித மாலா பரிஷ்க்ருத।*
*ஸ்த்திர மஹாயந்த்ர தந்த்ரித த்ருட தயா தந்த்ர யந்த்ரித*
*ஜயஜய ஸ்ரீ ஸுதர்சந ஜயஜய ஸ்ரீ ஸுதர்சந॥* (6)

ஒரு திருவடி முன்னும் மற்றொன்று பின்னுமாய் நிற்கின்ற நிலையால் அழகாய் விளங்குமவரே! மிகப் பெரிய திருவாயுதங்களால் சூழப்பெற்றவரே! கொடிய மாயைகளுக்கு வெளிப்பட்டவரே! பல்வகையான திருமாலைகளால் அலங்கரிக்கப் பெற்றவரே! நிலையான பெரிய யந்த்ரத்தில் அமர்ந்துள்ளவரே! உறுதியான கருணையென்னும் கட்டுத்தறியில் கட்டுப்பட்டவரே! திருவாழியாழ்வானே! மேன்மேலும் வெற்றி கொண்டு விளங்குக.

*மஹித ஸம்பத் ஸதக்ஷர விஹித ஸம்பத் ஷடக்ஷர*
*ஷடர சக்ர ப்ரதிஷ்ட்டித ஸகல தத்த்வ ப்ரதிஷ்ட்டித।*
*விவித ஸங்கல்ப கல்பக விபுத ஸங்கல்ப கல்பக*
*ஜயஜய ஸ்ரீ ஸுதர்சந ஜயஜய ஸ்ரீ ஸுதர்சந॥* (7)

மிக உயர்ந்த செல்வமாகிய ஞானத்தையுடைய சாதுக்களுக்கு அழியாத மோக்ஷத்தையளிப்பவரே! அளிக்கப்பட்ட செல்வங்களையுடைய ஆறெழுத்துக் கொண்ட மந்த்ரத்தையுடையவரே! ஆறுகோணம் உடைய சக்கரத்தில் நிலை பெற்றவரே! எல்லாத் தத்துவங்களிலும் அந்தர்யாமியாய் நிற்பவரே! பல்வகையான விரும்பிய செயல்களை செய்து முடிப்பவரே! தேவர்களின் விருப்பத்துக்கு கற்பக மரம் போன்றவரே! திருவாழியாழ்வானே! மேன்மேலும் வெற்றி கொண்டு விளங்குக.

*புவந நேத்ர த்ரயீமய ஸவந தேஜஸ் த்ரயீமய*
*நிரவதி ஸ்வாது சிந்மய நிகில ஸக்தே ஜகந்மய।*
*அமித விச்வ க்ரியாமய ஸமித விஷ்வக் பயாமய*
*ஜயஜய ஸ்ரீ ஸுதர்சந ஜயஜய ஸ்ரீ ஸுதர்சந॥* (8)

உலகங்களுக்கு கண் போன்றவரே! மூன்று வேதங்களின் வடிவு கொண்டவரே! யாகங்களில் உள்ள மூன்று அக்நி வடிவமாயுள்ளவரே! எல்லை அற்று இனியதான ஞான வடிவமாய் நிற்பவரே! எல்லா வற்றையும் செய்ய வல்லமையுடையவரே! உலக உருக்கொண்டவரே! அளவற்ற உலகத்தின் கருமங்க ளால் ஆராதிக்கப்படுமவரே! ஒழிக்கப்பட்ட நான்கு புறங்களிலும் பரவுகின்ற அச்சத்தையும் நோயையும் உடையவரே! திருவாழியாழ்வானே! மேன்மேலும் வெற்றி கொண்டு விளங்குக.

*த்விசதுஷ்கமிதம் ப்ரபூதஸாரம்*
*படதாம் வேங்கடநாயக ப்ரணீதம்।*
*விஷமேபி மநோரத: ப்ரதாவந்*
*ந விஹந்யேத ரதாங்க துர்ய குப்த:॥* (9)

ஸ்ரீவேங்கடநாதனால் இயற்றப்பெற்றதும் சாரார்த்தங்கள் நிறைந்ததுமான இந்த எட்டுச் சுலோகம் கொண்ட ஸ்தோத்ரத்தை படிப்பவர்களின் விருப்பம் பெற அரிதான விஷயத்தில் சென்றாலும் திருவாழியாழ்வானால் காக்கப்படுமாதலின் தடைப்படாது.

*ஸ்ரீஸுதர்சநாஷ்டகம் முற்றும்*



# வேதவியாசர்

திரு.ஆர்.நமச்சிவாயன், சென்னை
94440 11502

நமது பாரத பூமி பழம் பெரும்பூமி இதற்கெனத் தனித்துவமான அடையாளங்கள் பல உள்ளன. அவற்றுள் பழமையான பல பெரிய கோயில்கள் ஆட்சி செய்த அரசர்களின் அரண்மனைகள், உலகினர் கண்டு மகிழும் பல நினைவுச் சின்னங்கள் என கணக்கில் அடங்காதவைகள் நமது பழமையைப் போற்றுகின்றன.

மிகவும் போற்றுதற்குரிய நமது நான்கு வேதங்கள் மற்றும் மகாகாவியங்களான வான்மீகி முனிவர் இயற்றிய இராமாயணமும், வேதவியாசர் இயற்றிய மகாபாரதமும் நமது பழமையை மேலும் உலகம் அறியச் செய்வன எனில் அது மிகையன்று.

மகாபாரதத்திற்கு ஓர் பெருமையுண்டு. வேதவியாசர், மகாபாரதக் கதையை வடமொழியில் சுலோகங்களாகக் கூற, விநாயகப் பெருமான் அதைத் தம் தந்தத்தையே எழுத்தாணியாகக் கொண்டு ஓலைச் சுவடிகளில் எழுதினார் என்பர். மகா பாரதக் கதையில் கௌரவர் நூறு பேரும், பஞ்ச பாண்டவர் ஐந்து பேரும் அரசாட்சிக்கு வர வேண்டிய இளவரசர்கள்.

மண்ணாசை காரணமாக அரசு உரிமையை அடைய, கௌரவர்கள், பஞ்சபாண்டவருடன் சூது சொக்காட்டான் ஆடி, வஞ்சனை செய்து அவர்களின் அரசு உரிமை மற்றும் உடைமைகளை பறித்துக் கொண்டனர்.இதனால், "பஞ்ச பாண்டவர்கள் அனைவரும் பன்னிரண்டு ஆண்டுகள் வனவாச வாழ்வும், ஒரு ஆண்டு மறைந்து வாழும் அக்ஞாத வாழ்வும் மேற்கொள்ள வேண்டும்" என்று கூறிப் பாண்டவர்களை, தம் தேசத்திலிருந்து கௌரவர்கள் வெளியேற்றினர். இதற்குப் பெரிதும் துணையாய் இருந்தவர் துரியோதனின் மாமன் சகுனியே ஆவார்.

பஞ்ச பாண்டவர் பன்னிரண்டு ஆண்டு வனவாசம் முடித்து, காட்டில் மறைந்து வாழும் வாழ்வை மேற்கொண்டபோது, ஒருநாள் வெகுதூரம் வழிநடந்த களைப்பால் தாக வேட்கை அடைந்தனர். தருமராசர், தம் தம்பியரை நோக்கி, "நீர் வேட்கை அதிகமாக உள்ளதால் குடிக்கத் தண்ணீர் கொண்டு வருக" என்று கூறினார்.முதலில் பீமனும், பிறகு அருச்சுனனும் சென்றனர். வெகு நேரமாகியும் தம்பியர் நீர் கொண்டு வரவில்லை. மீண்டும் தருமர், நகுலன் மற்றும் சகாதேவனையும் ஒவ்வொருவராக, நீர் கொணர அனுப்பி, வெகுநேரம் காத்திருந்து ஏமாற்றமடைந்தார்.

இறுதியாக, தருமர், தாமே நீர் தேடிச் சென்று, தம் தம்பியர் அனைவரும் மூர்ச்சையாய் இருப்பதைக் கண்டார். மனவேதனை அடைந்தார். தாக வேட்கை காரணமாக, தண்ணீரினை அருந்த முயலும்போது, அசரீரியாக ஒரு குரல் கேட்டது.

"ஓ! தருமராஜனே! நில், நீர் அருந்தாதே! நான் கேட்கும் கேள்விகட்குப் பதில் கூறிய பின்னரே, தண்ணீர் குடிக்கலாம்" என்று கூறியது. தரும ராஜர், " நீர் குடித்து விட்டு பின் உங்கள் கேள்விகட்குப் பதில் தருவேன்" என்றார்.மீண்டும் அசரீரி, "என் கேள்விகட்கு பதில் கூறாமல், தண்ணீர் குடித்தால் உம் தம்பியரின் நிலை தான் உமக்கும் ஏற்படும்" என்று கூறியது.

தருமர், "சரி" என்று ஒப்புக் கொண்டு "உமது கேள்விகளைக் கேட்கலாம்; நான் பதில் கூறு கிறேன்" என்று கூறினார். இனி – கேள்வி பதில் வருமாறு... வேதவியாசரின் சில அறிவு சார் வினா–விடைகள்:

தேவயட்சன் : இவ்வுலகில் தனியாகவே இயங்கக் கூடியவர் யார்?

தரும ராசன் : இவ்வுலகில் புற இருளையும், அக இருளையும் போக்கும், சூரிய பகவானே தனியாக இயங்கக்கூடியவர்.

தேவயட்சன் : இவ்வுலகில் மீண்டும் பிறப்பவர் யார்?

தருமராசன் : இவ்வுலகில் சந்திரனே மீண்டும் பிறக்கிறார்.

தேவயட்சன் : இவ்வுலகில் குளிரைப் போக்குவது எது?

தருமராசன் : இவ்வுலகில் நெருப்பே குளிரைப் போக்குகிறது.

தேவயட்சன் : இவ்வுலகில் விதைகள் முளைத்தெழத்தக்க இடம் எது?

தருமராசன் : இவ்வுலகில் பூமியே விதைகள் முளைத்தெழத்தக்க இடம் ஆகும்.

தேவயட்சன் : இவ்வுலகில் சூரியனை உதிக்கச் செய்வது எது?

தருமராசன் : இவ்வுலகில் பிரும்மமே (வேதங்களே) சூரியனை உதிக்கச் செய்கிறது.

தேவயட்சன் : மாலையில் சூரியனை மறையச் செய்பவர் யார்?

தருமராசன் : இவ்வுலகில் தர்மமே மாலையில் சூரியனை மறையச் செய்கிறது.

தேவயட்சன் : இவ்வுலகில் சூரியன் எதில் நிலைபெற்றுள்ளார்?

தருமராசன் : இவ்வுலகில் சூரியன், உண்மை என்னும் மெய்ப்பொருளில் நிலைபெற்றுள்ளார்.

தேவயட்சன் : ஒரு மனிதன் எதனால் அறிஞன் ஆகிறான்?

தருமராசன் : ஒரு மனிதன் தவம் செய்தாலே மிக உயர்ந்தவன் ஆகிறான்.

தேவயட்சன் : எது ஒரு மனிதனைத் தனக்கு நிகர் இல்லாதவனாக ஆக்குகிறது?

தருமராசன் : உண்மையும், நேர்மையுமே, ஒரு மனிதனைத் தனக்கு நிகரில்லாதவனாக ஆக்குகிறது.

தேவயட்சன் : எதனால் ஒரு மனிதன் வேத அறிஞன் ஆகிறான்?

தருமராசன் : ஒரு மனிதன் பெரியவர்களுக்குச் சேவை செய்வதினாலும், ஆன்மீகத் தேடலாலும் அறிஞன் ஆகிறான்.

தேவயட்சன் : பிராம்மணர்களின் உயர்ந்த இயல்பு யாது?

தருமராசன் : பிராம்மணர்களின் உயர்ந்த இயல்பு வேத சாஸ்திரத்தை அறிந்து இருத்தல் ஆகும்.

தேவயட்சன் : பிராம்மணர்களுக்கு நன்மை தரும் ஒத்த செயல்கள் யாவை?

தருமராசன் : பிராம்மணர்களுக்கு ஒழுக்கமும், தவமுமே நன்மை தரும் ஒத்த செயல்கள் ஆகும்.

இவ்வாறாக மேலும் பல கேள்விகளை யட்சன் கேட்டார். இக்கேள்விகளுக்கு தருமரின் பதிலைக் கேட்டு மகிழ்ச்சியுற்ற யட்சன், பாண்டவர்கள் அனைவரையும் உயிர்ப்பித்தார். இவ்வாறாக வேதவியாசர் அறம் சார்ந்த பல நன்னெறிகளை மகாபாரதத்தில் காட்டியுள்ளார்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**திருமலையில்**
**இரத்ததானம் செய்யுங்கள்!**
**திருமலையப்பனின் இறையருள் பெறுங்கள்!!**

- இரத்தம் தானத்தால் மட்டுமே வழங்க முடியும். இரத்தம் தேவைபடுபவர்களுக்கு அளிப்பதன் மூலம் ஒரு உயிரையும் காப்பாற்ற முடியும்.
- கலியுக வைகுண்டமான திருமலையில் இரத்த தானம் செய்வது புண்ணியமாகும்.
- திருமலை அஸ்வினி மருத்துவமனையில் தினமும் காலை 9.00 மணி முதல் 12.30 மணி வரை இரத்த தானம் அளிக்கலாம்.

தொலைபேசி எண் : 0877-2263601

இரத்தம் தானம் செய்யுங்கள்!
ஆபத்தில் உள்ளோரை காத்திடுங்கள்!!

# சிறு மா மனிசர்



எஸ். சுதர்சனம், நங்கை நல்லூர்

பகவான் ஸ்ரீமந்நாராயணனுக்குக் கைங்கர்யம் செய்து வாழும் உயர்ந்த பாகவதர்களை, ஆசார்யப் பெருமக்களை “சிறு மா மனிசர்” என்கிறார் ஸ்ரீவைஷ்ண குலபதி ஸ்வாமி நம்மாழ்வார் (திருவாய்மொழி 8.10.3). காட்சிக்கு எளியவர்கள், அடியேன் ராமாநுஜதாஸன் என்று சொல்லிக் கொண்டு படாடோபம் இல்லாமல், அடக்கம் அமரருள் உய்க்கும் என்ற உள் உணர்வோடு பகவத் பாகவதத் தொண்டு ஒன்றையே நினைத்திருப்பவர் களாவர். ஆனால், கருத்தில் பெரியவர்கள், ஞானமுடையவர்கள், பற்றற்றவர்கள். வைராக்ய சீலர்கள். மக்களை நல்வழிப்படுத்துவதிலும் சமூக நலனிலும் அக்கரை கொண்டவர்கள். நம் மனத்தில் நிரந்தரமான இடம் பிடித்தவர்கள். அப்படிப்பட்ட மஹான்களில் ஒருவர்தான் “பிரதிவாதி பயங்கரம் அண்ணன் ஸ்வாமிகள்”. தர்க்க சாஸ்திரம் கற்றுணர்ந்து வாதம் செய்வதில் வல்லவராய், மற்ற சமய வல்லுணர்களோடு வாதம் செய்து, ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தமே உயர்ந்தது என்றும் ஸ்ரீமந்நாராயணனே உயர்வற உயர்ந்தவன், முழுமுதற்கடவுள், பரம்பொருள் என்னும் உண்மையை ஆழ்வார்கள் காட்டிய வழியில், ஸ்ரீமத் ராமாநுஜர் வழிநின்று நிலை நாட்டியவர் மஹான் “பிரதிவாதி பயங்கரம் அண்ணன் ஸ்வாமிகள்”.

*“நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன*
*நாரணனைக் காட்டிய வேதம் களிப்புற்றது”*

–இராமாநுச நூற்றந்தாதி 54

*“பார்த்தான் அறு சமயங்கள் பதைப்ப”* (52)
*“கூறும் சமயங்கள் ஆறும் குலைய ”* (46)

என்று திருவரங்கத்து அமுதனார் பாடியபடித் தன் வாதத்தைத் திறமையாகவும் தெளிவாகவும் நிலை நிறுத்தும் திறன் கொண்டிருந்ததாலும், மற்றையச் சமய வல்லுணர்கள் இவரிடம் வாதம் செய்யப் பயந்து ஓடியதாலும் “பிரதிவாதி பயங்கரம் அண்ணன்” என்ற புகழாரம் சூட்டப் பெற்ற மஹான். பொய்ப் பிரசாரம் செய்பவர்கள் வேதப் பயிருக்கு இடைஞ்சலான களை போன்றவர்கள், அவர்களின் பொய்வாதம் எக்காலத்தாயினும் எதிர்காலத்தில் எழுதப்பட்டாலும் அவற்றை எல்லாம் எதிர்த்து, வேதங்களிலிருந்தும், புராணங்களிலிருந்தும், ஆழ்வார்கள் அருளிச் செய்த தமிழ்மறை திவ்யப்

## ஆகஸ்ட் மாத பண்டிகைகள், பருவ தினங்கள் மற்றும் தி.தி.தே. ஆலய உற்சவங்கள்

| | |
|---|---|
| 01 | நாகசதுர்த்தி, திருவாடிப்பூரம், திருமலையப்ப ஸ்வாமி புரசைவாரி தோட்டத்தில் எழுந்தருளல். |
| 02 | கருட பஞ்சமி, திருமலையப்ப ஸ்வாமி கருட வாகனம் |
| 02-11 | நாராயணவனம் ஸ்ரீவீரபத்ர ஸ்வாமி பிரம்மோத்ஸவம். |
| 02-04 | வாயல்பாடு ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி பட்டாபிஷேக உத்ஸவம் |
| 05 | வரலக்ஷ்மி விரதம். |
| 07-10 | திருமலையப்ப ஸ்வாமி பவித்ரோத்ஸவம் |
| 10 | ஆளவந்தார் திருநட்சத்திரம் |
| 9-11 | கார்வேடி நகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி தெப்போத்ஸவம் |
| 12 | ஸ்ரீஹயக்ரீவ ஜயந்தி |
| 19 | கோகுலாஷ்டமி |
| 20 | கண்ணன் திருநட்சத்திரம் |
| 29 | பலராம ஜயந்தி |
| 30 | வராக ஜயந்தி |
| 31 | விநாயக சதுர்த்தி |

பிரபந்தங்களிலிருந்தும் மேற்கோள்கள் காட்டி, ஸ்ரீவைஷ்ணவத் தத்துவங்களே சிறந்தது, உயர்ந்தது, உண்மையானது என்று நிலை நாட்டியவர் அண்ணன் ஸ்வாமிகள்.

"வாழ்வற்றது தொல்லை வாதியர்க்கு, என்றும் மறையவர் தம் என்றும் ஸ்ரீவைஷ்ணவ நெறிகள் தலை நிமிர்ந்து நிற்க வழிபடுத்திவர் "பிரதிவாதி பயங்கரம் அண்ணன் ஸ்வாமிகள்" என்றால் மிகையாகாது குலசேகர ஆழ்வார் அருளிச் செய்தது போல் *"தவ முடைத்துத் தரணி தானே"* (பெருமாள் திருமொழி 10.5) பூமி பாக்யம் பெற்றது. சாஸ்திரங்களில் ஏற்படும் சந்தேகம் போயிற்று, இவ்வாறு சாதனை களை, தன் வாழ்நாளில் நிகழ்த்தியவர் "பிரதிவாதி பயங்கரம் அண்ணன் ஸ்வாமிகள்".

ஜீவாத்மாக்களே ! நீங்கள் இனிமேல் பாபங்கள் செய்யாமல் வாழலாம். நல்ல சூழ்நிலை ஏற்படப் போகிறது. நரகங்களே இல்லை என்று நல்ல தருணம் விரைவில் உருவாகும். யமனுக்கு இம்மண்ணுலகில் ஒரு வேலையும் இல்லை. கலி புருஷனால் பேரருளாளனின் வடிவழகையும், திருக்கல்யாண குணங்களையும் பாடிக் கொண்டு ஸ்ரீவைஷ்ணவத் தத்துவங்களை உலகில் நிலை நாட்ட அவதார புருஷர் கள் அவதரிக்கப் போகின்றார்கள். நீங்கள் வாழ்க! வாழ்க! என்று ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மங்களா சாசனம் செய்தார் நம்மாழ்வார் (திரு. மொழி 5.2.1).

*"பொலிக! பொலிக ! பொலிக ! போயிற்று வல்லுயிர்ச் சாபம்*
*நலியும் நரகமும் நைந்த நமனுக்கு இங்கு யாதொன்றுமில்லை*
*கலியும் கெடும் கண்டு கொண்மின் கடல் வண்ணன் பூதங்கள் மண்மேல்*
*மலியப் புகுந்து இசை பாடி ஆடி உழிதரக் கண்டோம்"*

நம்மாழ்வார் வாக்கு எவ்வளவு உண்மை. திருமாலுக்குக் கைங்கர்யங்களை செய்து திருமாலின் புகழை உலகறியச் செய்த ஆழ்வார்கள், நாத முனி, யாமுன முனி, ஸ்ரீமத் ராமாநுஜர் அவதரித்த இம்மண்ணில் தோன்றிய மஹான்களில் ஒப்பற்ற ஒருவர்தான் "பிரதிவாதி பயங்கரம் அண்ணன்" கி.பி. 1361 பிளவ வருடம் ஆடிமாதம் பூசம் திருநக்ஷத்திரத் தில் காஞ்சிபுரத்தில் அவதரித்தவர். "ஹஸ்திகிரி நாதன்" என்று சிறுவயதில் அழைக்கப்பட்டார்.

தர்க்கம் செய்து பிற சமயவாதிகளை வாதம் செய்து வென்றதால், நயினாராசார்யர் ஸ்வாமி தன் சீடன் அண்ணனுக்கு "பிரதிவாதி பயங்கரம் அண்ணன்" என்னும் விருதை அளித்தார்.

திருமணமானபின் அண்ணன் தன் மனைவியுடன் திருமலை சென்று திருவேங்கட நாதனுக்குக் கைங்கர் யங்கள் செய்து வந்தார். *"ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை"* (திருவாய் மொழி 3.3.1) செய்து வந்த அண்ணன் மஹான்களின் பாராட்டுக்களைப் பெற்றார். "ஸ்ரீகைங்கர்ய ஸ்ரீ" என்றழைக்கப்பட்டார். ஏழுமலையானே மகிழ்ந்து அண்ணாவிற்குத் தீர்த்த கைங்கர்யம் தந்தருளுமாறு பணித்தாராம்.

பகவான் அர்ச்சா அவதார மூர்த்தி, கைங்கர்ய பரர் தோழப்பர் மூலம் – தோழப்பர் முகமாக – அண்ணன் ஸ்வாமிக்கு திருமஞ்சனத்திற்கும், திரு ஆராதனம் செய்யவும் தீர்த்தம் கொண்டுவரும் கைங்கர்யத்தை நியமித்தானாம். தீர்த்தம் அர்ச்சக ருக்குத் தருவதற்கு முன் தீர்த்த பரிமளம் – ஏலக்காய்,

கிராம்பு, குங்குமப் பூ, திருத்துழாய் – சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கட்டளை *''தீர்த்தனுக்கற்ற பின் மற்றோர் சர ணில்லை என்றெண்ணி, தீர்த்தனுக்கே தீர்த்த மனத் தனனாகி''* (திருவாய்மொழி 7.10.11) தூய்மையான மனத்துடன் ஏக சிந்தையனாய், அண்ணன் ஸ்வாமிகளும் தீர்த்த கைங்கர்யம் செய்து வந்தார். பகவான் திருவுள்ளம் உகந்தான். அண்ணனின் பெருமையை உலகறியச் செய்ய திருவிளையாடல் நிகழ்த்துகிறான்.

ஒரு ஸ்ரீவைஷ்ணவர் ஸ்ரீரங்கத்திலிருந்து திருவேங்கடமுடையானை சேவிக்கத் திருமலை எழுந்தருளினார். அண்ணாவோடு தங்கி, அண்ணாவின் உதவியோடு திருமலையானைச் சேவித்து மகிழ்ந்தார். *''என் அரங்கத்தின்னமுதர், குழலழகர், வாயழகர், கண்ணழகர், கொப்பூழில் எழு கமலப் பூவழகர் எம்மானார்''* (நாச்சியார் திருமொழி 11.2) என்று ஸ்ரீரங்கனைப் புகழ்ந்தார்.

“வண்டினம் முரலும் சோலை, மயிலினம் ஆலும் சோலை, கொண்டல் மீதணவு சோலை, குயிலினம் கூவும் சோலை, அண்டர்கோன் அமரும் சோலை, அணி திருவரங்கம்” என்று திருவரங்கத்தின் அழகை விவரித்தார். “மறைப் பெருந்தீ வளர்த்திருப்பார் வரு விருந்தை அளித்திருப்பார்'' என்று ஸ்ரீரங்க வாசிகளைப் புகழ்ந்தார். திருவரங்கன் திருவடிவாரத்தில் அமர்ந்து கொண்டு பகவானுக்குத் தொண்டு புரியும் ஆசார்யப் பெருமக்களைப் பற்றியும், பாகவதர்களின் பெருமையைப் பற்றியும் பரக்கப் பேசினார், பெரிய ஜீயர் என்று பெருமைபெற்ற மணவாள மாமுனிகளைப் பற்றியும் பேசினார்.

*''பயிலும் சுடரொளி மூர்த்தியைப் பங்கயக் கண்ணனை*
*பயில இனிய நம் பாற்கடல் சேர்ந்த பரமனை''*

*''தோளும் ஓர் நான்குடைத் தூமணி வண்ணன் தன்னை,*
*தாளும் தடக்கையும் கூப்பிப் பணியுமவர்கண்டீர்''*

– திருவாய் மொழி 3.7.1,2

மணவாள மாமுனியான அம்மஹானைக் காண அண்ணாவின் உள்ளம் துடித்தது.

*''எம்பெருமான் தாள் தொழுவார் காண்மின். என் தலை மேலாரே''*

– பெரிய திருமொழி 7.4.1

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# திருப்பதியில் தரிசிக்க வேண்டிய ஆலயங்கள்

### ஸ்ரீ கோவிந்தராஜ ஸ்வாமி கோயில் :

இங்கு எழுந்தருளியுள்ள மூல மூர்த்தி வைணவத் திலகமான ஸ்ரீராமாநுஜரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக புராணங்கள் கூறுகின்றன. இங்கு உள்ள மூலவர் கிடந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். ஸ்ரீஆண்டாள், ஸ்ரீபார்த்தசாரதி மற்றும் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியும் இக்கோயிலில் இடம் பெற்றுள் ளனர்.

☎ 0877–2264592.

### ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி கோயில் :

இக்கோயில் திருப்பதி இரயில் நிலையத்திலிருந்து சுமார் ஒரு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இக்கோயில் ஸ்ரீராமர் லக்ஷ்மணர் மற்றும் சீதை இலங்கையிலிருந்து திரும்பி வரும்போது திருப்பதிக்கு வந்ததின் நினைவாக எழுப்பப்பட்டதாகும்.

☎ 0877–2264584.

### ஸ்ரீ கபிலேஸ்வர ஸ்வாமி கோயில் :

இங்கு அமைந்திருக்கும் சிவன் கோயில் திருப்பதி நகரத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ளது. கபிலமஹரிஷி யால் இங்குள்ள சிவலிங்கம் தோற்றுவிக்கப் பட்டதால் இந்த மூலவருக்கு கபிலேஸ்வரர் என்று பெயர் வந்தது. இங்கு உள்ள தீர்த்தமும் கபிலதீர்த்தம் என்றே அழைக்கப்படுகிறது.

☎ 0877– 2264587.

### அலர்மேல்மங்காபுரம் (திருச்சானூர்) :

இது திருப்பதிக்கு 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இதுவும் பழமை வாய்ந்த புனிதத் திருத்தலமாகும். திருவேங்கடவனின் தேவியான ஸ்ரீபத்மாவதி தாயார் மூலவராக இக் கோயிலில் எழுந்தருளியுள்ளார்.

☎ 0877–2264586.

*"எம் பெருமான் தாள் தொழுவார் எப்பொழுதும்*
*என் மனத்தே இருக்கின்றாரே"*

– பெரிய திருமொழி 7.4.2

*"எம் பெருமான் தாளை நாளும் உள்ளத்தே*
*வைப்பார்க்கு இது காணீர் என்னுள்ளம் உருகுமாறே"*

– பெரிய திருமொழி 7.4.9

மாமுனிகளைக் காண அண்ணன் ஸ்வாமிகள் ஏங்கிக் கொண்டிருந்தார் என்பதில் வியப்பில்லை.

திருமலையிலிருந்து நியமனம் பெற்றுத் தன் குடும்பத்துடன் ஸ்ரீரங்கம் வந்தடைந்து, மாமுனிகளின் திருமாளிகை அடைந்து, மாமுனிகளை சாஷ்டாங்க மாக வணங்கி நின்றார். அப்பொழுது மாமுனிகள் திருவாய்மொழி 4.10 *''ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதுமில்லா அன்று''* என்று தொடங்கும் பதிகத்திற்குக் காலக்ஷேபம் – பொருள் சொல்லிக் கொண்டிருந்த ஆழ்வார் திருநகரி ஆதிநாதனே பரம்பொருள் என்று நம்மாழ்வார் நிர்ணயம் செய்யும் பதிகம்.

அன்று முதல் மாமுனிகளின் சிஷ்யரானார். மாமுனிவருடன் சென்று ஸ்ரீரங்க நாதனையும் ஸ்ரீரங்க நாயகித் தாயாரையும் சேவித்து அரங்கனின் பரிபூர்ண அருள் பெற்று மணவாள மாமுனிகள் மடத்தில் காலக்ஷேபம் அநுபவித்துக் கொண்டிருந் தார். கந்தாடை அண்ணன், வானமாமலை ஜீயர் போன்ற பல ஆசார்ய சம்பந்தம் பெற்று சூரியனைப் போல் பிரகாசமாக வாழ்ந்தார். மாமுனிகளால் "ஸ்ரீவைஷ்ணவ தாஸன்" என்றழைக்கப்பட்டார்.

மாமுனிகளுடன் திவ்யதேச யாத்திரை சென்று, திருமலையை அடைந்து, மாமுனிகள் நியமிக்க, திருவேங்கடமுடையான் சுப்ரபாதம் (திருப்பள்ளி எழுச்சி), ப்ரபத்தி (சரணாகதி) போன்ற பல மங்கல தோத்திரங்கள் அருளினார். இத்தோத்திரங்கள் இன்றும் திருமலையில் ஒலிக்கின்றன. "ஸ்ரீ பாஷ்யம் ஆசார்யர்" என்றும் மாமுனிகளின் ஆசீர்வாதத்துடன் ஸ்ரீபாஷ்ய சிம்ஹாசனத்திற்குத் தலைவரானார்.

சாதனையாளர் குறிக்கோளுடன் வாழ்ந்தவர். ஸ்ரீவைஷ்ணவம் தழைத்தெழப் பாடுபட்டவர். அண்ணலின் திருவடிகளில் பணிந்து, அவர் வழி சென்று, பயனடைவோம்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம்,
திருப்பதி

## திருமலையில் பார்க்க வேண்டிய முக்கிய இடங்கள்

**ஸ்வாமி புஷ்கரணி :**

இந்தத் திருக்குளம் திருமலையில் திருமலை யான் சந்நதியின் அருகிலுள்ளது. பக்தர்கள் கோயிலுக்குள் நுழையும் முன்னர் இந்தப் புனிதமான திருக்குளத்தில் நீராடினால் தனது உடல் சுத்தத் துடன் மனசுத்தியும் ஆகிறது.

**ஆகாஸகங்கை :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையி லிருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ளது.

**பாபவிநாசம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையி லிருந்து 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**வைகுண்ட தீர்த்தம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையில் 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தும்புரு தீர்த்தம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையி லிருந்து 16 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தி.தி.தே. வனத்தோட்டம் :**

தேவஸ்தானத்தினர் திருமலையில் கண்களுக்கு விருந்தளிக்கும் விதத்தில் வனத்தோட்டம் வளர்க் கின்றனர். இந்தத் தோட்டத்தில் மிகவும் அழகான செடிகள், மரங்கள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன.

**புவியியல் வளைவு (சிலாதோரணம்) :**

புவியியல் அமைப்பில் இயற்கையாக அமைந்த இந்த சிலாதோரணம் ஆலயத்தின் வடமேற்கு திசையிலிருந்து 1 கி.மீ. தூரத்திலுள்ளது.

**நாதநீராஜன மண்டபம் :**

தர்ம பிரசார பரிஷத்தின் கீழ் இயக்கப்படுகிற இந்த மண்டபத்தில் சொற்பொழிவுகள், ஹரிகதை கள், சங்கீத பஜனைகள் இன்னும் பல கலைநிகழ்ச்சி கள் நடத்தப்படுகின்றன.

**ஸ்ரீவேங்கடேஸ்வரா தியான மண்டபம் :**

அபூர்வமான புராண பொருட்களோடு மட்டு மல்லாமல் சித்திர, சிலை கைவண்ண கலை வேலைப்பாடுகளோடு தியானத்திற்கு ஏற்றவாறு அமைந்த மண்டபம் இது. திருமலை எஸ்.வி. மியூஜியம் அருகே தியான நிலையத்தில் அமர்ந்து பக்தர்கள் பகவானை தியானித்து மனதில் ஏற்பட்ட மனச்சுமைகளை குறைத்துக் கொள்ளலாம்.

**நீதிக் கதை**

# திருடன் சாதுவானான்

திரு. ஜெ. சுவாமிநாதன்,
சென்னை.

ஒரு நாள் இரவு ஒரு திருடன் காவல்களைக் கடந்து அரசனுடைய அரண்மனையில் திருடுவதற்காக நுழைந்தான். அந்தபுரத்தில் அரசன் ராணியிடம் "நம் மகளை ஆற்றங்கரையில் வசித்துக் கொண்டிருக்கும் சாதுக்களில் ஒருவருக்கு திருமணம் செய்து கொடுக்கப் போகிறேன்" என்று கூறியதை திருடன் கேட்டான். உடனே திருடன் நாளைக்கே நான் சாது வேஷம் தரித்து ஆற்றங்கரையில் சாதுக்களோடு ஒருவராக உட்கார்ந்து கொள்கிறேன்; ஒரு வேளை எனக்கே யோகம் அடித்து இளவரசியே எனக்கு மனைவியாக ஆனாலும் ஆகலாம் என முடிவெடுத்து அரண்மனையை விட்டு அகன்று மறுநாள் ஆற்றங்கரையில் சாதுக்களோடு அமர்ந்திருந்தான்.

மறுநாள் அரசன் உத்தரவுப்படி அரண்மனை சேவகர்கள் ஆற்றங்கரைக்கு வந்து அங்கு அமர்ந்திருந்த சன்னியாசிகள் ஒவ்வொருவரிடமும் மன்னரின் மகளை மணம் புரிய வேண்டும் என்று கேட்டனர். சாதுக்கள் அனைவரும் மறுத்து விட்டார்கள். கபடவேஷம் பூண்ட திருட சன்னியாசியிடம் கேட்ட போது அவன் பதில் பேசாது மௌனமாய் இருந்தான். சேவகர்கள் அரசனிடம் சென்று "சாதுக்கள் அனைவரும் மறுத்து விட்டனர். ஒரே ஒரு சாது மட்டும் ஏதும் பேசாமல் மௌனமாக இருந்தார்" என்று கூறினர்.

அரசன் தானே நேரடியாக அந்த கபடவேட சாதுவிடம் மிக்கப் பணிவுடன் வணங்கி தன் மகளை திருமணம் செய்துக்கொள்ள வேண்டினான். அரசனே நேரில் வந்ததையும், தன் முன் பணிவுடன் வேண்டி நின்றதைக் கண்ட கபட சன்னியாசி மனம் மாறினான். "நான் சாது அல்ல; சாதுவின் உடையை மட்டுமே அணிந்த என்னிடம் அரசனே நேரில் வந்து வேண்டி நிற்கிறான்" – இந்த எண்ணம் அவன் மனதை முற்றிலும் மாற்றியது. அந்த நிமிடமே அவன் உண்மையான தூய துறவியானான். கடும் தவம் புரிந்து தபஸ்விகளில் ஒருவர் ஆனான். மகானின் நிலையை அடைந்த அவனுக்கு அனைவரும் தலை வணங்கினர்.

தீயவைகளை ஒழித்து உள்ளம் மாறினால் நன்மையை அடையலாம். அனைவரும் போற்ற வாழலாம். உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலை எல்லாம் எம்பெருமான் கண்ணன் என்று சித்தோபாயமாக பற்றின நம்மாழ்வார் (1102) திருவாய்மொழி பாசுரங்களை அருளிய பின் தான் பரமபதம் அடைந்தார். ஆனால் "தேவு மற்றறியேன் சடகோபன்" என்ற மதுரகவியோ பத்தே பாசுரங்களில் சரமபர்வ நிஷ்டராய் இருந்து பரமபதம் அடைந்தார்.

எனவே தான் ஸ்ரீ மணவாள மாமுனிகளும் தன் உபதேசரத் தின மாலையில் ***"வாய்த்த திருமந்திரத்தின் மத்திம மாம்பதம் போல் சீர்த்த மதுரகவி செய் கலையை - ஆர்த்த புகழ் ஆரியர்கள் தாங்கள் அருளிச் செயல் நடுவே சேர்வித்தார் தாற்பரியம் தேர்ந்து"*** – என அருளினார். பகவானை பற்றுவதை விட அவன் அடியார்களைப் பற்றுவதே சால சிறந்தது. பரதனைப் பற்றிய சத்ருக்னனைப் போல், உடையவரைப் பற்றிய வடுகநம்பியைப் போல, திருமங்கை மன்னனும், "கற்றது, உன் திருவெட்டெழுத்து – உற்றது உன்னடி யார்க்கு அடிமை" என்பதை உணர்ந்து நாமும் அவ்வாறே வாழ்வோமாக !



*"சித்திரையிற் சித்திரை நாள் சிறக்க வந்தோன் வாழியே*
*திருகோளூரவதரித்த செல்வனார் வாழியே ...*
*மத்திமமாம் பதப்பொருளை வாழ்வித்தான் வாழியே*
*மதுரகவி திருவடிகள் வாழி வாழி வாழியே".*







# ஆடித் தபசு

புலவர் க. சுகுமாரன், மன்னார்குடி

சங்கரன் கோயில் திருநெல்வேலியிலிருந்து சுமார் ஐம்பது கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. சங்கர நயினார் கோயில், புன்னைவனம் என்ற வேறு பெயர்களும் உள்ளன. பதினொன்றாம் நூற்றாண்டில் வக்கிர பாண்டியன் என்பவன் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தான். அவன் யானையின் மீது ஏறி மீனாட்சி அம்மனை தரிசிக்கச் சென்று கொண்டிருந்தான். யானை குறிப்பிட்ட ஓரிடத்தில் நின்று மண்ணைக் கிளறுவது வழக்கம். முதலில் பாண்டியன் அதை கவனிக்க வில்லை. அவன் கோயிலுக்குச் செல்லும் போதெல்லாம் யானை அவ்வாறு மண்ணைத் தோண்டியது. யானை மண்ணைத் தோண்டிய அப்பகுதி புன்னை மரங்கள் நிறைந்த அழகிய வனமாக மாறியது.

மணிக்ரீவன் என்பவன் அந்த புன்னை மரங்களின் இடையே ஒரு பூந்தோட்டம் அமைத்தான். பூந்தோட்டத்திற்கு அருகில் பாம்பு புற்று இருந்தது. மணிக்ரீவன் அதனை மண்வெட்டியால் வெட்டித் தகர்த்தான். அப்போது புற்றுக்குள் இருந்த நாகத்தின் வாலை மண்வெட்டித் துண்டித்தது. புற்றினுள் சிவலிங்கத்திற்குப் படத்தால் குடை பிடித்த நிலையில் ஒரு நாகம் இருப்பதைக் கண்டான் மணிக்ரீவன். அவன் உடனே உக்கிர பாண்டியனிடம் சென்று புன்னை வனத்தில் புற்றுக்குள் பாம்பும் சிவலிங்கமும் காணப்பட்ட செய்தியைக் கூறினான்.

உக்கிர பாண்டியன் புன்னை வனத்திற்கு விரைந்து சென்றான். மதுரைக்குச் சென்று அங்கயற்கண்ணியையும் சொக்க நாதனையும் வழிபட்ட புண்ணியத்தால் தான் புன்னை வனத்தில் தோன்றிக் காட்சியளித்ததாகச் சிவபெருமான் அசரீரியாகக் கூறினார். பெரிதும் மகிழ்ந்த உக்கிர பாண்டியன் புற்றுக்குள் இருந்த சிவலிங்கத்தை முறைப்படி பிரதிஷ்டை செய்து கோயிலையும் எழுப்பினான்.

## கோபுரம் கோயில்

சங்கரன் கோயில் இராஜ கோபுரம் 125 அடி உயரமுள்ள ஒன்பது நிலைக் கோபுரமாகும். முன்னால் பெரிய மண்டபம் உள்ளது. மண்டபத்தைக் கடந்து சென்று இராஜ கோபுரத்தின் வழியே உள்ளே நுழைந்தால் நாம் சங்கரலிங்கர் சந்நிதியை அடைவோம்.

இத்திருக்கோயில் மூன்று மூர்த்திகள் முக்கியமானவர்கள். அவர்கள் தனித்தனியே மூன்று பெரிய பகுதிகளில் சந்நிதி கொண்டு அருள்பாலிக்கின்றனர். தெற்குப் பக்கத்தில் சங்கர லிங்கரும், வடக்குப் பக்கத்தில் கோமதியன்னையும், இருவருக்கும் இடையில் சங்கர நாராயணரும் எழுந்தருளியுள்ளனர்.

## ஆடித்தபசு

சங்கர லிங்கருக்கும் கோமதி அன்னைக்கும் இடையில் இருக்கும் சங்கர நாராயணரே அம்பிகை ஆடித்தபசு இயற்றக் காரணமானவர். நாகர் இனத்தைச் சேர்ந்த சங்கரன் ஒரு சிவ பக்தன். பதுமன் விஷ்ணு பக்தன் இருவரும் அரன் அதிகனா? ஹரி

அதிகனா? என்று தங்களுக்குள் அடிக்கடி சண்டையிட்டுக் கொள்வார்கள். அதாவது சிவ பெருமான் உயரந்தவரா? திருமால் உயர்ந்தவரா? என்று தங்களுக்குள் வாதிடுவார்கள். ஒரு நாள் தற்செயலாக அம்பிகை அவர்களின் வாதத்தைக் கேட்க நேர்ந்தது.

அம்பிகை சிவபெருமானிடம் சென்று "தாங்கள் உயர்ந்தவரா? அல்லது திருமால் உயர்ந்தவரா? என்று கேட்டாள். பாண்டிய நாட்டின் புன்னை வனத்தில் தவமியற்றினால் அதனை அறியலாம் என்று சிவபெருமான் அம்பிகையிடம் கூறினார். அம்பிகையும் மண்ணுலகம் வந்து, ஆடி மாதத்தில் புன்னை வனத்தில் கடுந்தவம் இயற்றி னாள். ஆடி மாத பௌர்ணமி நாளில் பெருமான், சங்கரனும் நாராயணரும் இணைந்த சங்கர நாராயண வடிவத்தில் காட்சியருளினர். அதாவது இருவருக் குள் பேதமில்லை என்பதை தேவியின் தவத்தைக் காரணமாக வைத்து உலகத் திற்கு உணர்த்தினார் ஈசன்.

அன்று முதல் சங்கரன் கோயிலில் இருவரும் இணைந்த சங்கர நாராயண மூர்த்தமாக ஈசன் எழுந்தருளினான். இன்றும் சங்கரன் கோயிலில் ஆடித்தபசு விழா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

ஒவ்வொரு தவத்திலும் தவம் இயற்றும் அம்பிகை, தவத்தின் பயனா கிய ஈசனைத் திருமணம் செய்து கொள் வாள். ஆனால் குமரியில் தானுமால யனைத் திருமணம் செய்து கொள்ளாமல் கன்னியாக இருந்து அசுரனை வதைத் தாள். சங்கரன் கோயிலில் ஈசன் இரு வரும் இணைந்த கோலத்தில் தரிசனம் அளித்ததால் அவனைத் திருமணம் செய்து கொள்ள இயலவில்லை. ஆனால் கோமதி அன்னை ஐப்பசி மாதத்தில் சங்கர லிங்கரை மணந்து



கொள்ளும் திருவிழா நடை பெறுகிறது. சைவத் தமிழ்ச் சான்றோர் ஆகிய அமரர் அம்பை சங்கரனார் அவர்களி டம் குமாரசாமிப் புலவர் என்பவர் சிவ ஓலைச் சுவடி களைக் கொடுத்து உள்ளார். அவற்றுள் கோமதி அந்தாதியும் ஒன்று.

அம்பை சங்கரனார் பெரு முயற்சி செய்தும் அந்தாதியின் எஞ்சிய பாடல்கள் கிடைக்க வில்லை. ஆகவே கிடைத்ததைக் காப் பாற்ற எண்ணிய அம்பை சங்கரனார் கோமதி அந்தாதிக்கு உரையெழுதிப் பதிப் பித்து உள்ளார்கள். கோமதி அந்தாதியின் பாடல்களைப் பிரித்துப் படித்து பொருள் கொள்ளுதல் எளிதன்று. ஆனால் சங்கரனார் தமது ஆழ்ந்த புலமையினால் கோமதி அந்தாதியைத் தெளிவாக விளக்கி எழுதியுள்ளார்கள். பாண்டிய நாட்டிலுள்ள பஞ்ச பூதத் தலங்களில் சங்கரனார் கோயில் பிருத்வி தலமாகும். கோமதி அந்தாதி இத்தலத்திற்கு உரிய பல்வேறு பெயர்களையும் குறிப்பிடுகிறது. அவை கூழை, சிராசை, ராசை, வாராசை, புன்னை வனம், நாகாடவி என்பன.

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 72க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | வி | ட | வெ | ந் | தை | சி | ள | 2 து | | 3 தி |
| | ள் | க | ங் | ர | 4 வா | து | து | ப | ன் | 5 ஒ | ரு |
| மி | சு | ட் | ல | கா | 6 ம | | | | | | வ |
| | | 7 அ | பி | மா | ன | ஸ் | த | ல | ம் | ர் | ஹீ |
| டி | கு | க் | ய | ரி | 8 அ | ய | | | 9 ப | வா | ந் |
| ர் | | ர் | கூ | ர | 10 வ | ல் | 11 வா | லி | ர | ழ் | தி |
| லூ | ரி | த் | ப | டி | 12 தா | ஸ | | | சு | ரா | ர |
| வி | 13 ஆ | ண் | டா | ள் | ர | த் | | | ரா | க | பு |
| கோ | 14 கா | ண் | டீ | ப | ம் | 21 வா | | | ம | சே | ர |
| க் | | ன் | க | ச | ட் | 15 த | ர் | ம | ர் | ல | ம் |
| ரு | | 16 ஸ்ரீ | மு | ஷ் | ண | ம் | ல | சீ | ண | 17 கு | |
| 18 தி | 19 ஸ்ரீ | ர | ங் | க | ம் | று | யா | றை | பி | ர் | 20 தி |

## திருவல்லவாழ் (திருவல்லா)

108 திவ்ய தேச வைபவம்

68

– உருப்பட்டூர் சௌந்தரராஜன்,
சென்னை.



**புராண வரலாறு :**

கண்டா கர்ணனைப் பற்றிக் கேள்விப் பட்டு இருப்பீர்கள். சிவபிரான் நாமத்தைத் தவிர நாராயணன் நாமம் காதில் கேட்கக் கூடாது என்பதற்காகவே காதில் மணிகளை அணிந்திருப்பவன். யாராவது நாராயணன் திருநாமத்தைச் சொன்னால், உடனே தலையை அப்படியும், இப்படியும் ஆட்டுவானாம். காதில் அணிந்திருக்கும் மணி ஒலி எழுப்ப, பகவானின் திருநாமம் காதில் கேட்காமல் தடுப்பானாம். அப்படிப் பட்ட சிவபக்தன். அவன் சிவபிரானை நோக்கித் தவம் செய்ய, சிவனார் அவன் முன்பு தோன்றி வேண்டும் வரத்தைக் கேள் என்று ஆணையிட, கண்டாகர்ணன் மோக்ஷத்தைக் கேட்க, அது தன்னால் தர இயலாது என்று சொல்லி, அஷ்டாக்ஷரத்தை உபதேசித்து, இந்த எம்பெருமானைச் சரண் அடையச் சொல்ல, கண்டா கர்ணனும் நாராயணன் திருநாமம் தவிர, வேறு எதைக்கேட்டாலும் காதில் அணிந்திருந்த பொன்மணிகளால் அவற்றைத் தவிர்த்து, மிகுந்த பக்தியால் திருவல்லவாழ் பகவானை நேரில் தரிசித்து மோக்ஷம் பெற்றான் என்பர்.


**இன்னொரு வரலாறு :**

வியக்க வைக்கும் செய்தி: சங்கர மங்கலத்தாள் என்றும், சங்கர மங்கலத்து அம்மை என்றும் அழைக்கப்பட்ட "பதிவ்ரதை" நல்ல மக்கட்பேறு வேண்டி ஏகாதசி விரதம் இருக்கத் துவங்கி னாள். பல நாட்கள் சென்றன. தோலகாசுரன் என்பவன் இவ் வூரில் நடைபெறும் புனிதச் செயல்களை எல்லாம் அழித்ததோடு அல்லாமல் அவ்வூர் மக்களையும், ஊரைவிட்டு வெளியேற்றி னான். யாவரும், பயந்து ஊரை விட்டுச் சென்ற நிலையிலும் இந்த அம்மையார், ஊரிலேயே இருந்து விரதம் இருந்து வந் தாள். அப்போது ஒரு நாள் ஏகாதசி விரதம். மறுநாள் த்வாதசி பாரணை, அதிதிக்கு உபசாரம் செய்து, பாரணை செய்ய வேண்டும். இந்த அசுரன் எவரையும் வரவிடாமல் தடுத்தான். இவ்வூர் எம்பெருமான், பிரம்மச்சாரி வேடத்தில், அம்மையா ரிடம் வந்தார். ஆற்றில் நீராடிவிட்டு, பாரணைக்கு வருவதாகச் சொல்லிவிட்டு, தோலகாசுரனை, சக்ராயுதத்தால் அழித்து உடனே பூமியிலிருந்து ஒரு பொய்கையை உண்டாக்கி அதில் ஸ்நானம் செய்து பாரணைக்கு வந்தார்.

பாரணைக்கு உணவு தயாராக இருந்தது. வந்த பிரம்மச்சாரி, மான் தோலால் தன் திருமார்பில் வீற்றிருக்கும் திருமகளை மறைத்துக் கொள்வது அம்மைக்குத் தெரிந்து விட்டது. சிறிதும் பதறவில்லை. பாக்கு மரத்தின் பாளையில் உப்பிட்ட பண்டமான மாங்காயை வைத்து, பாரணைக்காகப் பகவானுக்குச் சமர்ப்பித்தாள். பகவான் உகந்து அம்மையை அநுக்ரஹிக்க, அம்மையார் உன் திருமார்பில் வாசம் செய்யும் திருமகளையும் தரிசித்தேன். உன்னையும் தரிசித்தேன். நீ இத்







திருத்தலத்தில் திருவாழ் மார்பனாக நிலைத்து இருந்து எல்லோருக்கும் அருள வேண்டும் என்று சொல்லி, தன்னை சேவித்தாலே ஏகாதசி விரத த்வாதசி பலனும் கிடைக்கும் என்று அருளினார். பகவான் இப்படி "திருவல்லவாழ்" என்று திருப்பெயர் கொண்டதாகச் சொல்வர்.

**சிறப்புகள் :**

இந்த க்ஷேத்ரத்தில் "விபூதி" பிரசாதமாகக் கொடுக்கப்படுகிறது. சக்கரத்தாழ்வார் மிகவும் சக்தி படைத்தவர். பெருமாளை அருகில் சென்று ஆண்கள் மட்டும் தரிசிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | திருவாழ்மார்பன், ஸ்ரீவல்ல பன், அலங்காரப் பிரான். |
| தாயார் | : | வாத்ஸல்ய நாச்சியார். செல்வத்திருக்கொழுந்து நாச்சியார். |
| விமாநம் | : | சதுரங்ககோல விமாநம். |
| தீர்த்தம் | : | பம்பா நதி, கண்டாகர்ண தீர்த்தம். |
| ப்ரத்யக்ஷம் | : | கண்டாகர்ணன், சங்கரமங்கலத்து அம்மை. |
| ஆகமம் | : | நம்பூதிரிகளின் பூஜா க்ரமம் |
| மங்களாசாஸனம் | : | நம்மாழ்வார், திருமங்கை ஆழ்வார். |

**விசேஷம் :**

செவிவழிச் செய்தி கூறுவது யாதெனின் கிருஷ்ணாவதாரத்தில், அந்த மாயனே இத்திவ்ய தேசத்து எம்பெருமானை இங்கு ஸ்தாபித்ததாகச் சொல்வர். தம்மை எவரேனும் ஏவிக்காரியம் நடத்திக் கொள்வர் என நினைத்து அதற்காகப் பகவான், வந்து நிற்கிற திவ்ய தேசம் இது பெரிய வாச்சான் பிள்ளை வ்யாக்யானம்.

நப்பின்னையை விவாகம் செய்து கொண்ட கோலத்தைத் திருமங்கை ஆழ்வார் "வல்லவாழ்ப் பின்னை மணாளன்" என்று கூறி மகிழ்கிறார் (பெரிய திருமடல் –118). ஸ்ரீஅழகிய மணவாளப் பெருமாள் நாயனார் ஆசார்ய ஹ்ருதயத்தில் மெலிவிலும் சேமம் கொள்விக்கும் க்ருபை தென்னகரிலே நித்யம் அதாவது – பகவானைப் பிரிந்து பக்தர்கள் மெலிந்து வருத்தப்பட்டாலும் அவன்தான் நம்மைக் காப்பாற்றுவான் என்கிற எண்ணம் மாறாதாம்.

**த்யானச்லோகம் :**

*புண்யேஸ்மிந் புவி வல்லவேதி நகரே*
*அலங்கார தேவோ மஹாந்*
*வாத்ஸல் யாஹ்வய நாயிகா விலஸிதே*
*திவ்யே விமாநோத்தமே ।*
*ப்ரக் யாதே சதுரங்க நாமருசிரே ப்ராசீமுகோ*
*பாஸதே*
*கண்டாகர்ண மஹாஸுரேந்த்ர, வரத:*
*தந்நாம தீர்த்தாந்திகே ॥*

**பாசுரம் :**

*"கழல்வனை பூரிப்பயாம் கண்டு கைதொழக்*
*கூடுங்கொலோ,*
*குழலென்ன, யாழுமென்னக் குளிர்சோலை*
*யுள்தேனருந்தி*
*மழலை வரி வண்டுகள் இசைபாடும்*
*திருவல்லவாழ்*
*சுழலின் மலி சக்கரப் பெருமானது*
*தொல்லருளே"*
– நம்மாழ்வார்

*“தந்தை தாய் மக்களே சுற்றம் என்று
உற்றவர் பற்றி நின்ற
பந்தம் ஆர் வாழ்க்கையை நொந்து நீ பழி
எனக் கருதினாயேல்,
அந்தமாய், ஆதியாய், ஆதிக்கும் ஆதியாய்,
ஆயனாய
மைந்தனார் வல்லவாழ் சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே!”*

– திருமங்கை ஆழ்வார்

*“உகந்தார்க்கு எஞ்ஞான்றும் உளனாய்,
உகவாது
இகந்தார்க்கு எஞ்ஞான்றும் இலனாய்த் -
திகழ்ந்திட்டு
அரு அல்ல, வாழ் உருவம் அல்ல என
நின்றான்
திருவல்லவாழ் உறையும்தே”*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

## நாமாக்கள்

631. *ஓம் ஸர்வதஸ்சக்ஷு: நம:*

எல்லோருடைய கண்களுக்கும் புலப்படும்படி அவதரிப்பவனே.

*ஓம் ஸ்வஸ்தி தக்ஷிணாயை நம:*

அடியவர்கள் விரும்புவதை விட, மிகுதியான க்ஷேமங்களை செய்வதில் சாமர்த்தியசாலியே.

632. *ஓம் அநீஸ: நம:*

பக்த பராதனனே

*ஓம் ஸஹஸ்ராஸ்யாயை நம:*

ஆயிரமாயிரம் பாஷைகளைப் பேசுபவளே.

633. *ஓம் சாஸ்வதஸ்திர: நம:*

அர்ச்சாமூர்த்தி ஸ்வரூபனே.

*ஓம் ஜ்ஞாநமாத்ரே நம:*

நல்லறிவு என்கிற பாலூட்டுகிற திருத்தாயாரே!

634. *ஓம் பூஸய நம:*

ஸ்வயம் வ்யக்தாதி ரூபங்களோடு பூமியில் சயனிப்பவனே.

*ஓம் வைஸ்வாநர்யை நம:*

எல்லாராலும் தியானிக்கப்பட்டு, தான் அழிவற்றவளாக இருந்து எல்லாரையும் திருநாட்டுக்கு அழைத்துச் செல்பவளே.

635. *ஓம் பூஷண: நம:*

அலங்காரப்பிரியனே.

*ஓம் அக்ஷவர்திந்யை நம:*

எல்லாப் புலன்களையும் இயங்கச் செய்பவளே.

636. *ஓம் பூதி: நம:*

பக்தர்களுக்குச் செல்வமே.

*ஓம் ப்ரத்யக்வராயை நம:*

ஞானிகளால் (உட்கண் உடையவர்) விரும்பித் தியானம் செய்யப்படுபவளே.

637. *ஓம் அஸோக நம:*

சோகமில்லா எல்லாருக்கும் நாதனே.

*ஓம் வாரணவத்யை நம:*

தன் அடியார்களுக்கு குற்றத்துக்குத் தண்டனை அளிக்க விரும்பும் பெருமாளையும் தடுக்கவல்ல சாதனங்களை உடையவளே.

638. *ஓம் ஸோகநாஸந: நம:*

தன்னைப் பிரிவதால் உண்டாகும் பக்தர்களின் சோகத்தை நீக்குபவனே.

*ஓம் அநஸூயாயை நம:*

அடியார்களின் குற்றங்களையும் நல்ல அறமாகவே எண்ணுபவளே.

639. *ஓம் அர்ச்சிஷ்மாந் நம:*

திவ்ய பேரொளியே.

*ஓம் துராஸதாயை நம:*

அடியவர்க்கு எளியவளாக இருந்தாலும், பிறருக்கு அணுக முடியாதவளே.

640. *ஓம் அர்ச்சித: நம:*

அர்ச்சாஸ்வரூபியே.

*ஓம் அருந்தத்யை நம:*

பகவானின் கட்டளையை மீறுகிறவர்கள்தான் சின்றிக்காமல் இருந்தாலும், கிரஹித்துத் தடுத்தும் பெருமாளைக் குறுக்கிட்டுத் தடுக்காதவளே.

*ஸ்ரீமதே வாத்ஸல்யவல்லீ ப்ரேமஸுபல்லவிதவல்லீ*

*ஸமேத ஸுந்தராய ஸ்ரீவல்லபாய பரப்ரஹ்மணே நம:*

**குறிப்பு :**

கொல்லம் – எர்ணாகுளம் ரயில் மார்க்கத்தில் இவ்வாலயம் அமைந்து உள்ளது.

திவ்ய தேச வைபவம் வளரும்...

தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972

**ஆளவந்தார் வாழித்திருநாமம் தொடர்ச்சி...**

சேனை முதலியாருடைய கணங்களில் ஒருவரான ஸிம்ஹாந்நர் என்ற நித்ய ஸூரியின் அம்சமாக அவதரித்தவர் ஆளவந்தாராவர். இவர் திருவவதார தலம் சோழ தேசத்தில் திருக்காவேரி தீரத்தில் வீரநாராயணபுரம். திருநக்ஷத்ரம் கலியுகம் 3077க்கு மேல் தாது வருடம், ஆடி மாதம் பௌர்ணமி வெள்ளிக்கிழமை, உத்தராடம் விஷ்கம்பம் பவ கரணம். திருத்தகப்பனார் ஈச்வர முனிகள். திருப்பாட்டனார் ஸ்ரீமந்நாதமுனிகள். இவருக்கு ஸ்ரீமந்நாத முனிகள் இட்ட திருநாமம் யமுனைத் துறைவர். இவர் அருளிய நூல்கள் எட்டு – 1. ஆத்ம ஸித்தி, 2. ஸம்வித்ஸித்தி, 3.ஈச்வர ஸித்தி என்னும் ஸித்தி த்ரயம், 4. கீதார்த்த ஸங்க்ரஹம், 5. ஆகம ப்ராமாண்யம், 6. மஹாபுருஷ நிர்ணயம், 7.ஸ்தோத்ர ரத்னம், 8. சதுச்லோகீ.

*மச்சணியும் மதிளரங்கம் வாழ்வித்தான் வாழியே*
*மறை நான்கும் ஒருருவில் மகிழ்ந்து கற்றான் வாழியே*
*பச்சையிட்ட ராமர்பதம் பகருமவன் வாழியே*
*பாடியத்தோன் ஈடேறப் பார்வை செய்தோன் வாழியே*
*கச்சிநகர் மாயன் இருகழல் பணிந்தோன் வாழியே*
*கடக உத்திராடத்துக் காலுதித்தான் வாழியே*
*அச்சமற மனமகிழ்ச்சி அணைந்திட்டான் வாழியே*
*ஆளவந்தார் தாளிணைகள் அனவரதம் வாழியே*

**பதவுரை**

மச்சு – மேல் மாடி, அணியும் – அழகும், மதிள் அரங்கம் – மதிளை உடைய ஸ்ரீரங்கத்தை, வாழ்வித்தான் – சுகமாக இருக்கும்படி செய்தவர், வாழியே – வாழ வேண்டும்; மறை நான்கும் – ருக், யஜுர், ஸாம, அதர்வண ஆகிய நான்கு வேதத்தை, ஒருருவில் – ஒரு தடவை சொன்னபோதே, மகிழ்ந்து கற்றான் – சந்தோஷத்துடன் கற்றவர்; பச்சையிட்ட – தூதுவளை கீரைஅளித்து உபகரித்த, ராமர் பதம் – இராமன் என்னும் மணக்கால் நம்பி திருவடிகளை, பகருமவன் – சொல்லுபவர்; பாடியத்தோன் – ஸ்ரீபாஷ்யத்தை அருளிய ராமாநுஜர், ஈடேற – உய்வு பெற, பார்வை செய்தோன் – கடாக்ஷித்தவர், கச்சிநகர் – காஞ்சி மாநகரம், மாயன் – வியப்பான வரதராஜப் பெருமாள், இருகழல் – பெருமை பொருந்திய திருவடிகள், பணிந்தோன் சேவித்தவர்; கடக உத்திராடத்து கால் – கடக மாதமான ஆடியில் உத்திராட நக்ஷத்ர முதல் பாதத்தில், உதித்தான் – தோன்றியவர்; அச்சமற – பயமின்றி, மனமகிழ்ச்சி – (ராமாநுஜரைக் கொண்டு தர்சனம் வளரச் செய்த மையால்) மனம் மகிழ்ச்சி கொண்டு, அணைந் திட்டான் – அடைந்தவராவர்; ஆளவந்தார் – ஆளவந்தார், தாளிணைகள் – இரு திருவடிகள், அனவரதம் – எப்போதும், வாழியே – வாழ வேண்டும்.

*(மச்சணியும் மதிளரங்கம் வாழ்வித்தான்)* “மச்சணி மாட மதிளரங்கர்” (11–4 நா.தி) என்று ஆண்டாள் அருளியபடியே மச்சணி – மேல் தளங்களாலே அலங்கரிக்கப்பெற்ற மாடமாளிகைகளையும் விரோதிகள் நுழையாதபடி அரணாயிருக்கும் மதிள்களையும் உடையது திருவரங்கம்.

திருப்பாணாழ்வார் "நீள்மதிள் அரங்கத்து" என்பதற்குச் சேர திருவரங்கத்தைக் காப்பதையே நோக்காகக் கொண்டு மதிள் விளங்குகிறது என்பர். மதிள் அரங்கம் என்பதனால் ஏழு மதிள்களால் சூழப்பட்டதாகும். "மதிள் திருவரங்கம்" என்பதற்கு ராம அவதாரம் போலே இங்கும் சில ஆபத்து விளையுமோ என்று அஞ்சித் திருமங்கையழ்வார் போல்வார் காப்பாக இட்ட மதிளையுடையது திருவரங்கம் என்பர். *"மதிள் திருவரங்கத்தானே"* (திருமாலை 42) என்று தொண்டரடிப்பொடியாழ்வார் மதிளே அரணாகக் கொண்டிருக்கும் திருவரங்கன் என்றது காண்க.

திருமங்கையாழ்வாரும் "செம்பொனாரும் மதிள் சூழ்ந்த தென்னரங்கம்" என்று அருளியதற்கு ஏற்ப தேவர்களுக்குத் தலைவனான பிரமனும் அவனாலே படைக்கப்பட்ட உலகிலுள்ளாரும் திரண்டு பற்றும்படியாய், அழகியதாய், உள்ளே சாயந்திருக்கும் அரங்கனுக்கு அரணாகத் தகும்படியான மதிள் என்பர் பெரியவாச்சான் பிள்ளை. மற்றும் கல்லின் மன்னு மதிள்" (பெரி.திரு.5.5.10) என்கிறார் ஆழ்வார். அதாவது கல்லாலே கட்டப்பட்ட திண்ணியதான ப்ராகாரம் என்றபடி. இப்படிப்பட்ட பெருமையுடைய அரங்கத்தை வாழ்வித்தவர் ஆளவந்தார். எங்ஙனேயென்னில் – யமுனைத்துறைவர் ராஜ புரோகிதனான வாதத்திலே ஆக்கியாழ்வான் வாயை அடக்குகையாலே ஆளவந்தார் என்ற திருநாமத்தை உடையவர் ஆனார்.

நம் தரிசனத்தை ஆளவந்தவராய் இருக்கையாலே, மணக்கால்நம்பி இத்தைக் கேள்விப்பட்டு இவரைத் திருத்தி ஸ்ரீமந்நாதமுனிகள் கொடுத்த நிதியை இவருக்குக் காட்ட எண்ணி, இவர் பக்கல் பல தடவை தூதுவளை கீரையைக் கொடுத்து உபகரித்து இவரை திருவரங்கம் அழைத்துச் சென்று பச்சை மாமலைபோல் திருமேனியையுடைய அரங்கனிடம் பக்தியை உண்டு பண்ணினார். இதனால் ஆளவந்தார் பெருமாள் கடாக்ஷத்தாலே பரம விரக்தராய் ஐச்வர்யம் முதலானவற்றை விட்டுவிட்டு ஸந்யாஸ ஆச்ரம ஸ்வீகாரம் பண்ணி பெரிய பெருமாள் ஸாம்ராஜ்யத்துள் புகுந்து, ஸ்ரீகார்யம் நிர்வஹித்து வந்தார். அந்தக் காலத்திலே "ஆகம ப்ராமாண்யம்" என்ற நூலை எழுதி பிற மதத்தவர்களைத் தோற்கடித்து திருவரங்கம் திருப்பதியிலே அவர்கள் இருப்பையும் போக்கினார். பின்னர், பல க்ரந்தங்கள் வாயிலாக தர்சன நிர்வாகம் செய்தருளினார் என்று கோயில் ஒழுகு கூறும். பராசரபட்டர் தாம் அருளிய ஸ்ரீரங்கராஜ ஸ்தவ பூர்வ சதகத்தில் (4) *"விதாய வைதிகம் ... யாமுநம் மநவாமஹை"* என்ற சுலோகம் மூலமாக ஆளவந்தார் அவதரிப்பதற்கு முன் வைதிக மார்க்க மானது தவறான வாதங்கள் என்னும் முள்செடிகள் நிறைந்திருந்தது. அந்த வழியிலுள்ள முள் செடி களை நீக்கி, பகவத் பக்தியை ஸ்ரீரங்கத்தில் நன்கு வளரச் செய்தவர் ஆளவந்தார் என்கிறார். இது பற்றியே "மதிளரங்கம் வாழ்வித்தான்" என்றபடி.

*(மறை நான்கும் ஒருருவில் மகிழ்ந்து கற்றான்)*

உபநயனம் செய்விக்கப்பட்ட பிறகு, ஆளவந்தார் வேதமோதும் அந்தணரான ஆசார்யரிடம் வேதங்களை ஓதினார். இவர் செய்த வேதாத்யயனம் மிகவும் வியப்பை விளைவித்தது. ஆசார்யரிடம் ஓதியது அனைத்தும் ஒரு முறை கேட்டதனாலேயே கற்றுக் கொண்டார். வேதமோதும் ஆசார்யரும் இவரை அழைத்து "நீர் இன்று ஏன் வேத அத்யயனத்துக்கு வரவில்லை" என்று கேட்டார்.

ஆசார்யருடைய அந்த வார்த்தையைக் கேட்டு, "ஐயா தேவரீர் நேற்று வேதத்தின் எந்த வாக்கியங்களை ஓதச் சொன்னீரோ அந்த வாக்கியங்களையே முன்பு போலவே இன்றும் ஓதச் சொல்லுகிறீர் அரைத்த மாவையே அரைப்பதுபோல சொன்னதை சொல்லும் இதனால் பயனில்லை என்று நான் வரவில்லை என்றார். இதனைக் கேட்ட ஆசார்யர் மிகவும் வியப்புற்றவராய், அவரை அணைத்துக் கொண்டு கொண்டாடினார். சிம்ஹாநனர் என்னும் நித்யஸூரிகள் அம்சமான இவர் சிறுமாமனிசராய் பதம், ஜடை, வர்ண க்ரமம், கனம் ஆகியவற்றோடு கூடிய எல்லா வேதங்களையும் ஆறு வேதாங்கங்களையும் ஆர்வமுடன் கற்றார் என்று பிரபந்நாம்ருதம் கூறும். இதுபற்றியே "ஒருருவில் மறை அனைத்தும் மகிழ்ந்து கற்றான்" என்றபடி.

தொடரும்...

**பக்கம் 45க்கான விடைகள்**

1) ஈ, 2) இ, 3) ஆ, 4) அ, 5) ஈ, 6)ஆ, 7)அ

பரமாத்மா, ஒரே விஷயத்தை மீண்டும் மீண்டும் சொல்வதை நாம் பார்க்கின்றோம். அதற்குக் காரணம் சொல்லுகின்ற அந்த விஷயம் கேட்பவரின் மனதில் நன்றாகப் பதிய வேண்டும் என்னும் நோக்கமே தவிர, அதை நாம் “கூறியது கூறல்” எனும் குற்றமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. மந்த்ரானாம் என்றால் என்ன?

“மனதிலே வைத்துப் போற்றுதல்” என்பது பொருள். அதாவது, நாம் சிந்திக்கின்ற ஒரு சில நல்ல விஷயங்கள் நம் மனதிலே ஆழமாக பதிந்து விட்டால், அவை நம்மை சில வேளைகளில் பெரிய ஆபத்துக்களிலிருந்தும் காக்கும். அப்படிப்பட்ட மந்திரங்கள் சொல்லிய விஷயங்களையே சொல்லிக் கொண்டிருக்கும். அப்படிச் சொல்வது அந்த விஷயம் மனதிலே உறுதியாக நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காகத்தான்.


எனவே தான் சங்கராசாரியர் போன்ற மஹா பெரியவர்கள் கூட மீண்டும் மீண்டும் கூறுதல் என்பதை குற்றமாகக் கொள்ள வேண்டியதில்லை எனக் கூறியுள்ளனர். ஆகவே, பரமாத்மா, ஒரே விஷயத்தை மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறுவதால், அது கூறியது கூறல் எனக் கொள்ளக் கூடாது. சிரமமான விஷயத்தை அறிய செய்வதற்கு கூறியது கூறல் என்பது நல்ல குணமே ஆகும். அது பரமாத்மா, ஒரு விஷயத்தை மீண்டும் மீண்டும் எடுத்துச் சொல்லுகின்ற போது, ஏதோ ஒரு சின்ன விஷயத்தை அல்லது சின்னதான ஐயப்பாட்டை நம் மனதிலிருந்து போக்க முயற்சிக்கிறார் என்பது பொருள். இது வரையில் “ஆத்மா அழிவற்றது” என்பதை நாம் அறிந்தோம்.

இதை நாம் எப்படி நிரூபிப்பது? அதாவது, நான் எந்தவொரு செயலுக்கும் காரண கர்த்தா இல்லை என்பதை உணர வேண்டும். நான் அழிந்து போகலாம். அல்லது வேறொரு செயலுக்கு நான் காரணமாகவும் இருக்கலாம். ஆனால் அந்த செயல்களுக்கு கர்த்தா நான் இல்லை. அந்த செயலுக்கும் எனக்கும் எந்தவொரு சம்பந்தமும் இல்லை.

அந்த செயல்கள் அனைத்தும் உடலோடு சம்பந்தப்பட்டவைகளே. நான் செயல்களோடு சம்பந்தம் இல்லாத தூய்மையான ஆத்மா என்று தோன்றினால், இதுவரையில் நான் சொல்லியது உமக்குப் புரிந்தது எனக் கொள்ளலாம்.

அப்படி இல்லையென்றால், இந்த விஷயத்தைப் புரிந்து கொள்ள மேலும் முயற்சி தேவை என்பதாகும். இந்த விஷயத்தை நமக்கு எடுத்துக் கூறுவதற்காகவே ***“கதம் ஸ புருஷ: பார்த்த கம்காதயதி ஹந்திகம்”*** என ஒரு கேள்வியைத் தொடுக்கிறார்.

நான் சொல்ல வந்த விஷயத்தை உங்கள் மனதில் பதியும்படி செய்ய முயற்சி செய்கிறேன். நீங்களும் அப்படியே அதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லும் முகமாக...



# ஸ்ரீமத் பகவத் கீதை

*"வேதாவிநாஷினம் நித்யம் ய ஏனமஜமவ்யயம்*
*கதம் ஸ புருஷ: பார்த கம் காதயதி ஹந்திகம்"*

எனக் கூறுகிறார். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலேயும் ஏதோ ஒரு விஷேசத்தை சேர்த்துக் கொள்கிறார். அதே நேரத்தில் சொல்ல வந்த செய்தி புரிந்து கொள்வதற்குச் சற்று கடினமானதாக இருந்தால், அச்செய்தி நம் மனதில் பதியும் வரையில் சொல்லிக் கொண்டே இருப்பார் பரமாத்மா. அவ்வகையில் முன்பு கூறிய செய்தியோடு மற்றொரு செய்தியையும் சேர்த்து கூறும் மேலே கூறிய சுலோகத்தில், உடலானது அழிந்து போகக் கூடியதானது என்பதை நமக்கு தெளிவுபடுத்துகிறார் பரமாத்மாவான பரம் பொருள்.

**தெலுங்கு மூலம் : திரு.கே. விஸ்வநாத சாஸ்திரி**
**தமிழாக்கம் : டாக்டர் சி. கோவிந்தசாமி**

தொடரும்...




## சிறுவர்களுக்கான "வினா-விடை"




1. "பேயின் முலையுண்ட பின்னான் இவன்" என்று பாடியவர் யார்?
   அ) திருமழிசையாழ்வார் ஆ) ஆண்டாள்
   இ) பெரிய நம்பி ஈ) பெரியாழ்வார்
2. முருகப்பெருமான் மீது திருப்புகழ் பாடியவர் யார்?
   அ) வள்ளலார் ஆ) பட்டினத்தார்
   இ) அருணகிரிநாதர் ஈ) அப்பர்
3. பதினெட்டு மகா புராணங்களை இயற்றியவர் யார்?
   அ) வால்மீகி ஆ) வேதவியாசர்
   இ) காளிதாசர் ஈ) சுகபிரம்மம்
4. திருவாழ்மார்பன் அருள்பாலிக்கும் திவ்ய தேசம் எது?
   அ) திருவல்லவாய் ஆ) திருவித்துவக்கோடு
   இ) திருநாவாய் ஈ) திருவனந்தபுரம்
5. ஆளவந்தார் அவதரித்த திவ்யத்தலம் எது?
   அ) ஆழ்வார் திருநகரி ஆ) திருவெஃகா
   இ) ஸ்ரீபெரும்புதூர் ஈ) வீரநாரயணபுரம்
6. பிரதிவாதி பயங்கரம் அண்ணன் ஸ்வாமிக்கு குருவாக விளங்கியவர் யார்?
   அ) இராமாநுஜர் ஆ) மணவாள மாமுனிகள்
   இ) யமுனைத்துறைவர் ஈ) மணக்கால் நம்பி
7. இராமாநுஜரின் சீடர்களில் ஒருவர் யார்?
   அ) திருவரங்கத்து அமுதனார் ஆ) திருக்கோட்டியூர் நம்பி
   இ) அண்ணன் ஸ்வாமி ஈ) ஆளவந்தார்



**விடைகளுக்கு இந்த இதழை அலசவும்**

அலசுவோம்......
அறிவோம்....
ஆதிகாவிய நாயகர்களை...

# பரதாழ்வான்



**–திரு. எஸ். ஸ்ரீதுரை,**
**காஞ்சிபுரம், 94881 39685**


ஸ்ரீ வைஷ்ணவர்கள் பரதனை "பரதாழ்வான்" என்று பெருமதிப்புடன் அழைப்பது வழக்கம். அத்தகைய பரதனின் பெருமைகளைப் பெரியாழ்வார் மற்றும் கம்பநாட்டாழ்வாரின் பாடல் வரிகளைக் கொண்டு அனுபவிப்பது மிகவும் இன்பம் தருவதாகும்.

*"படியில் குணத்துப் பரதநம்பிக்கு அன்று*
*அடிநிலை ஈந்தானைப் பாடிப்பற அயோத்தியர்*
*கோமானைப் பாடிப்பற".*

*"மரவடியைத் தம்பிக்கு வான்பணையும்*
*வைத்துப்போய் வானோர் வாழ..."*

பெரியாழ்வார் அருளிய பெரியாழ்வார் திருமொழியிலுள்ள மேற்கண்ட பாசுரங்கள் இரண்டும் ஸ்ரீமத்ராமாயணத்தில் வரும் "பாதுகாபட்டாபிஷேகம்" என்ற சிறப்புமிக்க நிகழ்வைக் குறிப்பிடுகின்றன.

"ஆழிசூழ் உலகெல்லாம் பரதனே ஆள" வழிவிட்டு, மரவுரி தரித்து வனவாசம் போகுமாறு கிடைத்த கட்டளையைச் சிரமேற்கொண்டு சீதையுடனும் லட்சுமணனுடனும் காட்டுக்குச் செல்கிறார் ஸ்ரீராமபிரான். கேகய நாட்டில் தன் மாமனின் அரண்மனையில் இருந்த பரதனுக்குத் தகவல் தெரிவிக்கப்படுகிறது. உடனிருந்த தம்பி சத்ருக்னனுடன் கிளம்பி அயோத்திக்கு வந்த பரதன் தன் அண்ணனைக் காட்டுக்கு அனுப்பி விட்டுத் தனக்காக அரியணையைத் தயாராக வைத்திருந்த தன்னுடைய தாய் கைகேயியைக் கடிந்து கொள்கிறான்.



தந்தையார் தசரதரின் இறுதிச் சடங்குகளை முடிந்த கையோடு காட்டுக்குச் சென்று தன் அண்ணன் ஸ்ரீராமபிரானைத் திரும்ப அழைத்து வந்து அரியணையில் அமர்த்துவதாகச் சொல்லி விட்டுக் கிளம்புகிறான். வனத்தில் ஸ்ரீராமபிரானைச் சந்திக்கும் பரதன் அவர் வனவாசத்தினைக் கைவிட்டு விட்டுத் திரும்பவும் அயோத்திக்கு வந்து அரசுப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சத்தியாக்கிரகம் செய்கிறான்.

ஸ்ரீராமபிரானோ தந்தைக்குக் கொடுத்த வாக்கினைக் காப்பாற்றியே தீருவேன் என்று சொல்லி விடுகிறார். தன்னுடைய பிரதிநிதியாகத் தன்னுடைய திருவடி நிலைகளை (பாதுகைகளை) பரதனிடம் கொடுத்தனுப்புகின்றார். பரதனும் பெருமகிழ்ச்சியுடன் கோசல நாட்டுக்குத் திரும்புகின்றான். ஆனால், அயோத்தியில் உள்ள தங்களின் அரண்மனைக்குச் செல்லாமல் நந்தி கிராமம் என்ற இடத்தில் இருந்து கொண்டு, தன் அண்ணன் ஸ்ரீராமபிரானின் திருப்பாதுகைகளை அரியணையில் வைத்து மரியாதை செய்து அவரது பிரதிநிதியாக ராஜ்யபாரம் செய்து வருகின்றான்.

இவையனைத்துமே நமக்கெல்லாம் தெரிந்த விஷயங்கள்தாம். ஆனால் இவ்விஷயத்தை பெரியாழ்வார் தம்முடைய திருவாக்கினால் அதனைக் கூறும்போது நம் நெஞ்சம் பரவசத்தில் ஆழ்கின்றது. *''படியில் குணத்துப் பரதநம்பிக்கு அன்று அடியிணை ஈந்தானை பாடிப்பற: அயோத்தியர் கோமானைப் பாடிப்பற''* என்று கூறும் பெரியாழ்வார், ஒப்பில்லாத உயர்ந்த குணங் களை உடைய பரதநம்பிக்கு ஸ்ரீராமன் தன்னு டைய பாதுகைகளை அளித்ததாக உரைக் கின்றார். மற்றொரு பாசுரத்திலோ, ஸ்ரீராமபிரான் பரதனிடம் தனக்கு பதிலாகத் தன்னுடைய திருவடி நிலைகளை ஈடாக (பணையமாக) கொடுத்துத் தன்னை விடுவித்துக் கொண்டதாகச் சொல்கின்றார்.

*''மரவடியைத் தம்பிக்கு வான்பணையம் வைத்துப் போய்''* என்பதுதான் எவ்வளவு அர்த்தபுஷ்டியுள்ள வாக்கியம்! ஸ்ரீராமபிரான் தனக்கு ஈடாகத் தன்னுடைய பாதுகைகளைத் தம்பி பரதனிடம் கொடுத்து மேற்கொண்டு வனவாசத்தைத் தொடர வழி செய்து கொண்டு விட்டார். பொதுவாக ஒருவர் இரண்டாயிரம் ரூபாய் மதிப்புள்ள பொருளை அடகு வைத்தால் அதே தொகை கடனாகக் கிடைப்பதில்லை. அடகு வைக்கும் பொருளின் மதிப்பைவிட அவர் பெற்றுக் கொள்ளும் கடன் தொகை குறைவா கவே இருக்கும்.

ஸ்ரீராமபிரானோ தன்னுடைய பாதுகை களை பரதனிடம் கொடுத்துவிட்டு (மேற்




கொண்டு தன்னுடைய அவதார நோக்கம் நிறை வேறுவ தற்காகத்) தன்னையே பெற்றுக் கொள்கின்றார். அப்படி என்றால் ஸ்ரீராமபிரானை விட அவரால் பரதனிடம் கொடுக்கப்பட்ட அவருடைய பாதுகைகளுக்குத் தானே அதிக மதிப்பு?

அதே சமயம், எம்பெருமான் ஸ்ரீராமபிரானை அயோத்திக்குத் திரும்புமாறு வற்புறுத்தாமல் விட்டு விட்டு, எம்பெருமானுக்கு ஈடாக அவரை விட மிகவும் மதிப்பு வாய்ந்த அவருடைய பாதுகைகளைப் பெற்றுக்கொண்ட பரதனின் மதிப்பு எவ்வளவு உயர்ந்தது!

இவ்வுலக வழக்கத்தில் ஒரு பொருளை ஈடாகப் பெற்றுக் கொண்டு கடன் வழங்குபவர்கள் அதிக வட்டிவிதிப்பு, அதனை வசூலிப்பதில் காட்டும் கண்டிப்பு ஆகிய காரணங்களால் பலருடைய மனக்கஷ்டத்துக் கும் காரணமாகின்றார்கள். ஆனால், பரதன்

## தியான சுலோகங்கள்

**மயி சன்யஸ்ய சர்வம்**
**த்வம் ஆத்மானம் யஸ்மிந் தவாஸ்தி ச|**
**மதர்த்தம் குரு கர்மாணி**
**மா ச தர்ம வ்யதி க்ரமந் ||**

**தர்ம மார்க்கத்தை தெரிந்துக்கொண்டு உன்னை என்னிடம் சரணாகதி செய்து விடு! நான் காப்பாற்றுகிறேன்!**

**தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.**



ஸ்ரீராமபிரானின் பாதுகைகளை ஈடாகப் பெற்றுக் கொண்ட செயலினால் மாபெரும் நன்மைகள் விளைந்ததாகப் பெரியோர்கள் கூறுகின்றார்கள்.

1) பரதனின் பேச்சைக் கேட்டு ஸ்ரீராமபிரான் தனது வனவாசத்தினை முடித்துக் கொண்டு அயோத்திக்குத் திரும்பாததால், தசரத மகாராஜா தம்முடைய மூன்றாவது மனைவி கைகேயிக்குக் கொடுத்த வாக்கு பொய்க்காமல் தப்பித்தது. இதனால் சுவர்க்கத்தில் இருந்த தசரதர் மனம் மகிழ்ந்தார்.

2) பதினான்கு வருடங்கள் வனவாசம் செய்துவிட்டு அதன் பின்பு அயோத்திக்குத் திரும்பி வருவேன் என்று ஸ்ரீராமபிரான் கொடுத்த வாக்குறுதியும் ஸ்ரீராமபிரானுக்கு மனமகிழ்ச்சியை உண்டாக்கியது.

3) எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ஸ்ரீராமபிரானாக இப்பூவுலகில் அவதரித்துக் கொடிய அரக்கனாகிய இராவணனை வதம் செய்வேன் என்று இந்திராதி தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் வாக்குறுதி அளித்திருந்தார். எம்பெருமான் பரதனிடம் தன்னுடைய பாதுகைகளைக் கொடுத்துவிட்டு வனவாசத்தைத் தொடர்ந்ததால் அந்த வாக்குறுதியும் நிறைவேறி தேவர்களும் முனிவர்களும் பெரும் மகிழ்ச்சியையும் நிம்மதியையும் அடைந்தார்கள்.

4) இதற்கெல்லாம் மேலாக, ஸ்ரீராமபிரானின் சொல்லுக்கு அவருடைய தம்பியே கட்டுப்படமாட்டான் என்ற அவச்சொல் ஏற்படாமல் காப்பாற்றப் பட்டதால் அவர்களுக்கு நல்லறங்களை போதித்த இக்ஷ்வாகு குலகுருவாகிய வசிஷ்டரும் மனம் மகிழ்ந்தாராம்.

இக்காரணங்களினால்தான் குகப்பெருமானும் “பரதனே, ஆயிரம் இராமர்கள் ஒன்று சேர்ந்தாலும் உனக்குச் சமமாக ஆவார்களோ என்று கூற முடியாது” என்று புகழ்ந்துரைக்கிறான்.

## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# சிறார் வாக்கு

*குழந்தைகளே ... நீங்கள் எழுதுங்கள் ! பெரியோர்களே ... நீங்கள் ஊக்குவியுங்கள் !!*

**சிறுவர் சிறுமிகளிடையே நம்முடைய பண்பாட்டின் மீதும், தர்மத்தின் மீதும், புராணத்தின் மீதும், பகவானின் மீதும், பெரியோர்களின் மீதும் ஒரு நல்ல எண்ணம் ஏற்படுவதற்கும், ஆன்மீகச் சிந்தனையை வளர்ப்பதற்கும் சிறார் வாக்கு எனும் தொடர் பிரதி மாதம் ஸப்தகிரி இதழில் மலர்கிறது.**

### யாரெல்லாம் எழுதலாம்? என்ன எழுத வேண்டும்?

பத்தாம் வகுப்பு அல்லது அதைவிடக் குறைந்த வகுப்பில் படிக்கும் மாணவ மாணவிகள் அனைவரும் எழுதலாம். நீங்கள் படித்த கதைகள், நீங்கள் கேட்ட தர்ம நீதிக்கதைகள், ஹரிகதைகள், புராணங்கள், இதிஹாசங்கள், நீதிசதகங்கள் முதலானவற்றில் உள்ள ஆன்மீகக் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு நீங்கள் கதையாகவோ, கவிதையாகவோ, கட்டுரையாகவோ அல்லது பகவான் மீது உங்களுக்கு எழும் சிந்தனையினையோ எழுதலாம்.

### பெரியோர்கள் செய்ய வேண்டியன...

குழந்தைகளிடம் நம்முடைய புராண, இதிஹாஸங்கள் மீது நல்அறிவினை வளர்ப்பதற்கு அவர்களுக்குத் தகுந்த அறிவுரைகளை வழங்கி, சிறிய சிறிய ஆன்மீக நூல்களை படிக்குமாறு அவர்களை ஊக்குவித்து எழுத வையுங்கள்.

### நிபந்தனைகள் :

**படைப்பு இரண்டு பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். ஒரு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும். முழு விலாசம், பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன், படைப்பு உங்கள் சொந்தமானது என்னும் உறுதிப்பத்திரத்தில் நீங்கள் பயிலும் பள்ளித் தலைமையாசிரியர் கையொப்பமிட்டு அனுப்ப வேண்டும். நீங்கள் படைப்பினை அனுப்பின பிறகு இறுதி முடிவு பிரதான ஆசிரியருடையதே. படைப்பின் மீது எத்தகைய கடிதப் போக்குவரத்துக்கும் இடமில்லை.**

*படைப்பினை அனுப்ப வேண்டிய முகவரி :*

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், கே.டி. சாலை, தி.தி. தேவஸ்தானம், திருப்பதி–517 507.



குழந்தைகளே எழுதுங்கள்!
கோவிந்தன் திருவருளை பெறுங்கள்!!



# ஜூலை 2022
# ராசிப் பலன்கள்



- சேலம் முராரி. எம்.வி. நரநாராயணன், 94422 86213.

### மேஷம்
தொழில்துறையில் நல்ல வளர்ச்சியும் லாபமும் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு உண்டு. பூமி வாங்கும் யோகமுண்டு. நண்பர்கள், உறவினர்கள் உதவி, தெய்வதரிசனம் போன்றவை கிட்டும். கோபத்தைக் குறைத்துக் கொள்ளவும். பணவரவும் உண்டு.

### ரிஷபம்
நினைத்ததை சாதிப்பீர்கள். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். தாராள பணப்புழக்கம் உண்டு. தாய்–தந்தையர் ஆரோக்யம் நன்றாக இருக்கும். மனைவிக்கு மட்டும் சிறு அளவில் ஆரோக்யக் குறைகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். தொழில் துறையில் புதிய முயற்சிகள் செய்யலாம். நல்ல லாபம் உண்டு.

### மிதுனம்
மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவார்கள். நல்ல கல்லூரிகளில் இடம் கிடைக்கும். பெண்களால் ஆதாயம் உண்டு. புதிதாக வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. தொழில் துறையில் அலைச்சல் இருந்தாலும் நிச்சய வளர்ச்சி உண்டு. தாய் தந்தையரின் ஆதரவு உண்டு. குழந்தைகளுக்குச் சிறு ஆரோக்யக் குறைவு ஏற்பட்டுப் பிறகு சரியாகும்.

### கடகம்
கண் திருஷ்டியால் எடுத்த காரியம் தாமதமாகும். தெய்வ பலத்தின் மூலமாக தொழில் விருத்தி உண்டு. திருமணமாகாதவர்களுக்கு விரைவில் திருமணம் கைகூடும். தொழில் துறையில் புதிய முயற்சிகளைச் செய்யலாம். மனைவிக்கு சிறு பிரச்சனைகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர்.

### சிம்மம்
பணவிஷயத்தில் மிகுந்த எச்சரிக்கை தேவை. கடன் வாங்குவதையும் கடன் கொடுப்பதையும் முடிந்தவரை தவிர்க்கலாம். குழந்தைகள் படிப்பு மற்றும் வேலை விஷயமாக உங்களை விட்டுப் பிரிய நேரிடும். அஜீரணக் கோளாறு உண்டாகும். தொழில் துறையில் மந்த நிலை ஏற்படும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலையில் மாற்றம் உண்டாகும்.

### கன்னி
தொழில் துறையில் புதிய முயற்சிகள் செய்யலாம். எதிர்பார்த்த தனலாபம் கிடைக்கும். திருமணமாகாதவர்களுக்கு விரைவில் திருமணம் கைகூடும். தாய்–தந்தையரின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெற்று நல்ல கல்லூரிகளில் இடம் கிடைக்கப் பெறுவார்கள். குடும்ப உறுப்பினர்களுடன் வாக்குவாதம் செய்யாமல் இருப்பது நல்லது.

### துலாம்
தொழில் துறையில் அலைச்சல் மிகவும் அதிகமாக இருக்கும். கடன் வாங்கி சுபச் செலவுகளைச் செய் வீர்கள். ஆரோக்கிய குறைபாடுகள் சரியாகும். தொழில் துறையில் புதிய முயற்சிகள் தாமதமாகும். தாயின் ஆரோக்யத்தில் கவனம் தேவை. தந்தையிடமிருந்துநல்ல ஆலோசனைகளை பெறலாம். குழந்தைகளின் ஆரோக்யம் நன்றாக இருக்கும்.

### விருச்சிகம்
மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். உங்களுக்கு உடல் உஷ்ணம் காரணமாக சிறு அளவில் மருத்துவச் செலவுகள் உண்டாகும். குழந்தைகளின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் பழைய பாக்கிகள் வசூலாகும். மனைவியின் ஆரோக்யத்தில் சிறு பின்னடைவு ஏற்பட்டுப் பிறகு சரியாகும்.

### தனசு
தெய்வஸ்தலங்களுக்கு யாத்திரை செய்து நல்ல தரிசனம் கிடைக்கப் பெறுவார்கள். மனைவி மூலம் நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். பூர்வ புண்ணிய சொத்துக்கள் சிறு பிரச்சனையின் பேரில் கிடைக்கும். திட தேக ஆரோக்யத்தைப் பெறுவார்கள். சிறு குழந்தைகளுக்குச் சிறு உடல் உபாதைகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். தொழில் துறையில் நல்ல லாபம் உண்டு.

### மகரம்
பிடிவாதமாகக் காரியத்தைச் செய்து சாதிப்பீர்கள். இளைய–மூத்த சகோதரர்களுக்கு நன்மை உண்டு. பூர்வ புண்ணிய சொத்துக்கள் விரைவில் கிடைக்கும். தொழில் துறையில் நல்ல வளர்ச்சி உண்டு. குழந்தைகளின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். ஆரோக்யத்தில் இருந்த குறைபாடுகள் நீங்கும். பணப்பிரச்சனைகள் தீரும்.

### கும்பம்
குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். தொழில் வளர்ச்சி நன்றாக இருக்கும். செலவினங்களுக்கு ஏற்ப நல்ல வருவாய் கிடைக்கும். இளைய சகோதரர்களுக்குச் சிறு உடல் உபாதைகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். உடல் நிலையில் இருந்த பாதிப்புகள் முற்றிலுமாக விலகும். தாய்–தந்தையரின் ஆரோக்யம் நன்றாக இருக்கும்.

### மீனம்
மனக்குழப்பங்கள் அதிகமாக இருக்கும். சகோதர வழியில் தனவரவு உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெற்று நல்ல கல்லூரிகளில் இடம் கிடைக்கப் பெறுவார்கள். தொழில் துறையில் புதிய முயற்சிகள் செய்யலாம். செலவுக்கு ஏற்ப வருமானம் உண்டு. இரவு நேரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது.

## இதில் பொருந்தாதது எது?



................................

................................

................................

................................

குறிப்பு : ;ஆதி சக்தி, முருகன், குரு–சிஷ்யன், பூரி ஜெகந்நாத ஸ்வாமி இவற்றிற்கு தொடர்பு இல்லாதவற்றை கட்டத்தில் எழுதவும்.



இரண்டு சித்திரங்களுக்கு இடையே உள்ள ஏழு வித்தியாசங்களை கண்டு பிடியுங்கள்



1) பறவைகள்
2) மேகக்கூட்டம்
3) சிறுமியின் தலையில் உள்ள மலர்
4) தட்டில் உள்ள தாம்பூலம்
5) கோபுர வளாகத்தில் பக்தர்கள்
6) சிறுமி சடையில் ரிப்பன்
7) பூமியில் மேல் மலர்கள்

# உண்மையே பேசு

சித்திரக் கதை

கதை மூலம் : டாக்டர் கே.ரவிச்சந்திரன்

சித்திரம் : திரு. சிவாஜி





மகனின் குரல் ஓசை சோமய்யாவின் காதில் விழுந்தது.
ஐயோ! இதென்ன! இப்பொழுதே வருகிறேன்.
வருகிறேன்.
சோமய்யா வேகவேகமாக ஆட்டு மந்தையின் அருகே சென்றான்.
எங்கேடா... எங்கே புலி!
ஹாஹ்ஹஹ்ஹா... ஹாஹ்ஹாஹ்ஹா...
புலியா... ஹாஹ்ஹஹ்ஹா... புலியும் இல்லை... கிலியும் இல்லை... வேடிக்கையாக இருக்கிறதே!...
சோமய்யாவிற்கு கடுமையான கோபம் வந்தது.
முட்டாள் உனக்கு திமிர் மிகவும் அதிகமாகி விட்டது. இன்னொருமுறை இவ்விதம் செய்தால் தோலை உறித்து விடுகிறேன் பார்
சோமய்யா சென்ற சிறிது நேரத்தில் உண்மையாகவே புலி ஒன்று வந்தது.
ரங்கன் உயிர் பயத்துடன் மரத்தின் மீது ஏறிக் கொண்டான். புலி ஆட்டினை தூக்கிச் சென்றது.
அப்பா! அப்பா! உண்மையாகவே புலி அப்பா! காப்பாற்றுங்கள்... காப்பாற்றுங்கள்...
ரங்கனின் வார்த்தையைக் கேட்ட சோமய்யா இம்முறை உண்மையான புலி வந்தும் கூட நம்பவே இல்லை.
உழவுப் பணி முடித்து பின்னர் வந்த சோமய்யா நடந்தவற்றைக் கேட்டு மிகவும் வருத்தப்பட்டார். ரங்கனுக்கும் நற்புத்தி வந்தது. பொய் பேசினால் ஏற்படும் பின் விளைவையும் தெரிந்து கொண்டான்.
அப்பா! இனி எப்பொழுதும் பொய் பேச மாட்டேன்
முற்றும்.

பல்சுவை பகுதி

## சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...

பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...



## பொருத்துக...

1. திருமுருகன்- அ. வேப்பிலை
2. சக்தி - ஆ. துரோணர்
3. இராமநுஜர் - இ. வேல்
4. ஏகலைவன்- ஈ. அர்சுனன்
5. கண்ணன் - உ. வடுக நம்பி

1.இ, 2.அ, 3.உ, 4.ஆ, 5.ஈ.



## பாடல் அறிவோம்...


*"குரு பிரம்மா குரு விஷ்ணு குரு*
*தேவோ மகேஸ்வர:*
*குரு சாக்ஷாத் பரபிரம்மா தஸ்மை*
*ஸ்ரீகுரவே நம:"*

குருவே பிரம்மா, குருவே விஷ்ணு, குருவே மகேஸ்வரன், குருவே பரப்பிரம்மா அப்பேற்பட்ட குருவை வணங்குகிறேன்

## வார்த்தைகளை சரியாக அணிவகுத்து வாக்கியம் அமைக்கவும்...

சூரிய தேவன் குருவாகத் ஸ்ரீஅனுமனுக்கு மைந்தன் கேசரி திகழ்ந்தார்

கேசரி மைந்தன் ஸ்ரீஅனுமனுக்கு சூரிய தேவன் குருவாகத் திகழ்ந்தார்



## பாதையைக் கண்டுபிடி

மாதா பிதா குரு தெய்வம் என்ற வரிசையில் நாம் வணங்கத் தகும் நடமாடும் தெய்வமாக விளங்குபவரே குரு.

அப்பேற்பட்ட குருவை தேடிப்போகும் இரு சீடர்களுக்கும் வழிகாட்டுங்கள்.

## விடுகதை பகுதி...

1. அடி மலர்ந்து நுனி மலராத பூ எது?
2. கடல் நீரில் மலர்ந்து மழை நீரில் மடிவான். அவன் யார்?
3. மூன்று எழுத்து பெயர். முற்றும் வெள்ளை நிறம். அது என்ன?

1.வாழைப்பூ, 2.உப்பு 3.பஞ்சு

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.

## அண்மையில் ஒரிசா மாநிலம் புவனேஸ்வரில் தி.தி.தே. நிர்மாணித்த ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலய மஹாசம்ப்ரோக்ஷணத் திருக்காட்சிகள்









25-05-2022 அன்று தி.தி.தே. ஹனுமத் ஜெயந்தி விழாவினை மிகச் சிறப்பாக கொண்டாடியது. இந்நிகழ்ச்சியில் ஆகாச கங்கையில் அஞ்சனா தேவியுடன் கொலுவீற்றிருக்கும் பால ஹனுமனுக்கு தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு. ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள் பட்டு வஸ்திரங்களைச் சமர்ப்பித்தபோது







SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-06-2022 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/2021-2023 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No. PMGK/RNP/WPP-04(5)/2021-2023" Posting on 20th of Every month.



ஸ்ரீநிவாசமங்காபுரம்
ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி
சாக்ஷாத்கார வைபவம்
03-07-2022 முதல் 05-07-2022 வரை